
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மே 1 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
1932–2024 ANNIVERSARY
வரு. 92 இல. 103 | Wednesday 01, May, 2024 | 20பக்கங்கள் | 50/-

## மே தின கூட்டங்களில் 'ட்ரோன்களுக்கு' தடை
### பொலிஸார் அறிவிப்பு



மே தினக் கொண்டாட்டங்களை காணொளி பதிவு செய்ய, ட்ரோன்களை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு 06

## நாட்டை முன்னேற்றுவதிலுள்ள சவாலை முறியடிக்க வேண்டும்



உரிமைகள் மற்றும் கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் விளைவாக தொடங்கிய உலக தொழிலாளர் தினத்தின் 138 ஆவது வருடக் கொண்டாட்டத்தின் போது, ஒரு நாடாக நாம் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியிருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்னோக்கி நகர்த்துவதிலுள்ள சவாலை முறியடிக்க வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு நம், அனைவருக்கும் உள்ளது. இதற்காக ஒன்றிணைந்து உரிய திட்டமிடலூ டாக பணியாற்ற 06

## தொழில் உரிமைகளை பாதுகாக்க உறுதியுடன் ஒன்றிணைவோம்



வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாத்து நாட்டைக் கட்டியெழுப்ப உலக தொழிலாளர் தினத்தில் உறுதியுடன் ஒன்றிணைவோமென, பிரதமர் தினேஸ் குணவர்த்தன மே, தினச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உழைக்கும் மக்களின் உதிரம், வியர்வை மற்றும் உயிர்த் தியாகங்கள் மீதான பயணத்தின் வரலாற்றுப் பதிவாக 138ஆவது உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

இம்முறை, பொருளாதார நெருக்கடியின் முக்கியமான 06

## உழைப்புக்கான பெறுமதியை ஒன்றிணைந்து பாதுகாப்போம்



உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை ஒரு நாளில் மட்டும் அல்லாது வருடம் முழுவதும் பாதுகாக்க ஒன்று படுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சர்வதேச தொழிலாளர் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல வருடங்களாக, பாரதூரமான அவலங்களை எதிர்கொண்டு, நாட்டு மக்கள் மே தினத்தை கொண்டாடி வருகின்றனர். இப்பயங்கரமான அவலத்தில் எந்த மாற்றமும் 06

# சிறுவர் துன்புறுத்தல்களுக்கு எதிராக கடுமையாகும் சட்டம்

## தண்டனை சட்டக்கோவை, குற்றவியல் சட்டங்களை திருத்த அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் சிறுவர் உரிமைகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டு,

சிறுவர்கள் உடலியல் ரீதியாக தண்டனைக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில்,தண்டனை சட்டக்கோவை குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச ஆகியோரால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இணைந்த யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ சிறுவர்களுக்கு வழங்கப்படும் எந்த ஒரு தண்டனையும் சட்டத்தின்படி குற்றமாகக் கருதும் வகையில் இந்த சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

நல்லதையே சிறுவர்களுக்கு வழங்க வேண்டும் என்றால் கேட்டதை அவர்களுக்கு வழங்குவதை தடுக்க வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். இதன்படி, வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் விதிப்பது தடை செய்யப்பட உள்ளது. இந்நியதிகளை உள்ளடக்கி தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் 06

# இன்று தொழிலாளர் தினம்; நாடு முழுவதும் 40 பேரணிகள்


## எதிர்கால தேர்தலை மையப்படுத்தி கூட்டங்கள்

உலக தொழிலாளர் தினமான மே, தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அரசியல் கட்சிகள் செய்து முடித்துள்ளன.


ஜனாதிபதித் தேர்தல் உட்பட எதிர்வரும் தேர்தல்களுக்காக மக்கள் பலத்தை வெளிப்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் இத்தினத்தை பயன்படுத்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

நாடு முழுவதும் 40 மே தின பேரணிகளும், கொழும்பு மாவட்டத்தில் சுமார் 14 மே தின பேரணிகளும் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்புடன் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பு சத்தாம் வீதியில் நடைபெறவுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி நான்கு மே தின பேரணிகளை நடத்தவுள்ளது. அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு கன்னங்கர மாவத்தையில் மே தின பேரணி நடைபெறவுள்ளது. மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் பேரணிகளை நடத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி 06



## 'நாமல் உயன' ஸ்தாபகர் ஊடகங்களுக்கு பாராட்டு



முப்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தேசிய நாமல் உயனவின் மேம்பாட்டுக்காக ஆரம்பம் முதல் இன்று வரை அச்சு, இலத்திரனியல் ஊடகங்களாலும் ஊடகவியலாளர்களாலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை பாராட்டும் நிகழ்வு நேற்று மாலை அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தேசிய நாமல் உயனவின் ஸ்தாபகர் சங்கைக்குரிய வனவாசி ராகுல தேரர் மற்றும் சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் எட்மண்ட் ரணசிங்க ஆகியோர் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டபோது.

(படம்: ருக்மல் கமகே)

## ஐ.தே.க மற்றும் இ.தொ.காவின் கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்பு

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டம் இன்று (01) காலை 10.00 மணிக்கு கொட்டகலை பொது மைதானத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் ஆரம்பமாகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பில், ஜனாதிபதி இதில் கலந்து கொள்கிறார். பெருந்தோட்ட மக்கள்பெருந்திரளானோரின் பங்கேற்புடன் இந்த மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெறவுள்ளது.

மலையக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப் 06

## நட்டமீட்டிய அரச நிறுவனங்கள் பில்லியன் கணக்கில் இலாபம்

### அரசின் சிறந்த நடவடிக்கைகளே காரணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பில்லியன் கணக்கில் நட்டமீட்டிய அரச நிறுவனங்கள் தற்போது பில்லியன் கணக்கான இலாபத்தை ஈட்டி வருவதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு 743 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ள அரச நிறுவனங்கள், 2023 இல், 456 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். 06

## மே தினக் கொண்டாட்டத்தில் இந்திய இசைக் கலைஞர்கள்



மே தின பேரணியுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இசை நிகழ்ச்சி மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற்காக இந்திய இசைக் கலைஞர்கள் நேற்று (30) கட்டுநாயக்க 06

## ஜனாதிபதியாக ரணில் இருப்பதே நாட்டுக்கு நன்மையாக அமையும்

### எரிக்சொல்ஹெய்மிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பதே நாட்டுக்கு நன்மையாக அமையுமென்பதே எமது நிலைப்பாடாகுமென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று எரிக்சொல் ஹெய்மிடம் தெரிவித்தார்.

நாட்டினன் முன்னாள் சமாதானத் தூதுவரான நோர்வே பிரதி 06




92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# அமைச்சரவை தீர்மானங்கள்



**இலங்கை – இந்தோனேசிய வர்த்தக ஒப்பந்தம்**

இந்தோனேசியாவுடனான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2023.07.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை மார்ச் 14 ஆம் திகதியன்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் இந்தோனேசிய வர்த்தக அமைச்சர்களுக்கிடையில் இடம்பெற்றுள்ளதுடன் வர்த்தகக் கலந்துரையாடல் குழுவின் முதலாவது கூட்டம் இணையவழி ஊடாக மார்ச் 03 மற்றும் 04ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இப் பேச்சுவார்த்தைக் குழுவில் கலந்துரையாடல் பொறிமுறை, தரவுப் பரிமாற்றங்கள் செய்யப்படும் கால அட்டவணை, விடயதானம் மற்றும் செயல் எல்லை போன்ற துறைகள் பற்றி இருதரப்புக்கிடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. இக் குழுவின் இரண்டாவது கூட்டத்தை ஜூன்19 மற்றும் 20 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்த இது தரப்பும் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய உத்தேச முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதி சமர்ப்பித்த விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

**மிரிஸ்ஸ சமுத்திர வலயத்தை சரணாலயமாக மாற்றுதல்**

மிரிஸ்ஸ சமுத்திர வலயமாகவும், உயிரின சரணாலயமாகவும் பிரகடனப்படுத்துதல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுக்கு 2023.05.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதில் இம் முன்மொழிவுக்கு ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்கேற்புடன் மேலதிக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் தலைமையில் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த உபகுழுவால் மிரிஸ்ஸ சமுத்திர வலயத்தை சர்வதேச தரநியமங்களுக்கு இணங்க நீலக்கொடி கடற்கரை வலயமாகவும் சமுத்திர உயிரினங்கள் சரணாலயமாகவும் மாற்றியமைத்து தென்மாகாண சுற்றுலாப் பொருளாதாரத்தை ஐந்து மடங்கால் அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு, குறித்த விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த விதந்துரைகளை விடயதானத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சு மற்றும் நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**காங்கேசன்துறை துறைமுக மறுசீரமைப்பு கருத்திட்டம்**

இந்திய கடனுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017.05.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2019.12.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுச் செலவானது குறித்த கடன் தொகையை விட அதிகரித்தமையால் கருத்திட்டத்தின் செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாதுள்ளது.

அதற்கிணங்க அரச – தனியார் பங்குடமை பொறிமுறையின் கீழ் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அதன் ஒட்டுமொத்த மதிப்பீட்டுச் செலவையும் நிதியுதவியாக வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பட்டுள்ளது. குறித்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்கான ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**இலங்கை கசகஸ்தானுக்கிடையில் விமான சேவைகள்**

இலங்கைக்கும் கசகஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகளை மேம்படுத்துவதற்காக இருநாடுகளின் விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளுக்கும் இடையிலான விமான சேவைகள் தொடர்பான ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக 2015.05.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், இதுவரை குறித்த விமான சேவைகள் ஒப்பந்தம் கையொப்பமிடப்படவில்லை. உத்தேச விமான சேவைகள் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் எந்தவொரு இடத்திலிருந்தும் கசகஸ்தானின் எஸ்டானா அல்லது அல்மெட் வரைக்கும் திட்டவட்டமான விமான வழிப்பயணத்தினூடாக வாரத்திற்கு 07 தடவைகள் விமான சேவைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, இருதரப்பினரும் உடன்பாடு எட்டப்பட்டுள்ள விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்பு செய்தல்**

வரையறுக்கப்பட்ட சீநோர் அமைப்புக்கு சொந்தமான காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்பு செய்தல்; நோர்வே அரசசார்பற்ற நிறுவனத்தின் நிதியுதவியுடன் 1967 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் காரைநகரில் தாபிக்கப்பட்டுள்ள சீநோர் அமைப்பு 1990 ஆம் ஆண்டில் அரச கம்பனியாக மாற்றப்பட்டது. இவ்வமைப்பு கண்ணாடி இழை படகுகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டது. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேசத்தில் நிலவிய சூழ்நிலைகளால் காரைநகர் படகு கட்டும் தளத்தின் பணிகள் நிறுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இப்படகு கட்டும் தளத்தின் மறுசீரமைப்புக்காக 350 மில்லியன் ரூபா செலவிட்டிருப்பினும் போதியளவு நிதியின்மையால் எஞ்சிய சிவில் மற்றும் இயந்திரோபகரண நிதியொதுக்கீடு பூர்த்தியடையவில்லை. வரையறுக்கப்பட்ட சீநோர் அமைப்புக்குச் சொந்தமான காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் மேலும் சில பணிகளுக்காக 290 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உடன்பாடு கிடைத்துள்ளதுடன் உத்தேச நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இருதரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும், வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ருவன்டா – இலங்கைக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இராஜதந்திர, கடமைகள் அல்லது சேவைகளுக்கான கடவுச்சீட்டை கொண்டுள்ளவர்களுக்கு வீசா அனுமதியைப் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக 2019.05.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த ஒப்பந்தம் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. இருதரப்பினருக்குமிடையிலான இராஜதந்திர கடமைகள் அல்லது சேவைகளுக்கான கடவுச்சீட்டு கொண்டுள்ளவர்களுக்கு 30 நாட்களை விஞ்சாத காலப்பகுதிக்கு வீசா அனுமதியைப் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக இலங்கைக்கும் றுவன்டாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**வனவியல் நிறுவனத்தை ஊக்குவித்தல்**

வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு நடாத்தப்படும் நிரந்த சேவைக்கால பயிற்சிப் பாடநெறிகளுக்கு மேலதிகமாக இலங்கை வனவியல் நிறுவனத்திடமுள்ள வசதிகளைப் பயன்படுத்தி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் அவர்களிடம் வனங்கள் தொடர்பான சிறந்த மனப்பாங்கு, அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்ய முடியுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை வனவியல் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களை வேறு நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதன் மூலம் அரசுக்கு மேலதிக வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும். அதற்கமைய, குறுகியகால பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனவியல் நிறுவனம் மற்றும் இனாமலுவ களநிலைப் பயிற்சி நிலையத்தையும் வெளி தரப்பினருக்கு வழங்குவதற்காக வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**நன்னீர் மீன்பிடி தொழிற்றுறையை அபிவிருத்தி செய்தல்**

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கிராமிய மக்களின் போசாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார விருத்திக்கான உறுதிப்பாட்டுக்காக நீரியல் உயிரின வளர்ப்பை மையமாகக் கொண்டு நன்னீர் மீன்பிடி தொழிற்துறையை நிலைபேறான வகையில் அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்காக மூன்று மில்லியன் நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பான் அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை அநுராதபுரம்,மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்களின் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், நன்னீர் மீன்பிடி தொழிற்துறையை நிலைபேறான வகையில் உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய வரிகளை விடுவிப்பதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தொழில்நுட்பக் கல்வி கருத்திட்டக் காலத்தை நீடித்தல்**

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டாகும்போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருப்பினும், நாட்டில் நிலவிய கொவிட் நிலைமை மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போயுள்ளது. இதற்கு முன்னரும் குறித்த கருத்திட்டக் காலத்தை 2024.03.30 வரை நீடிப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் ஒரு மாகாணத்திற்கு 04 தொழிநுட்ப ஆய்வு கூடங்கள் வீதம் ஒன்பது மாகாணங்களுக்கு 36 தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களை நிர்மாணிப்பதற்கும், தற்போதுள்ள 15 கட்டிடங்களில் ஆய்வு கூடங்களை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 65 சதவீதமாகும். தொழிநுட்பவியல் பாடங்கள் தற்போது கற்பிக்கப்பட்டு வரும் 135 பாடசாலைகளுக்கான சிறிய தொழில்நுட்ப அலகுகளை நிர்மாணிப்பதற்கும் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கும் தேவையான தொழில்நுட்ப கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களின் இயலளவு விருத்திக்காக கருத்திட்டத்தின் கீழ் எஞ்சுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நிதியை பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்து கருத்திட்டத்தில் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதற்காக கருத்திட்டக் காலப் பகுதியை மேலும் 2025.03.30 ஆம் திகதி வரை நீடிப்பதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அநுராதபுரம் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திக்கு 100 மில். ஒதுக்கீடு

## இஷாக் ரஹ்மான் எம்.பி ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்





அநுராதபுரம் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இந்நிதியைக் கொண்டு மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலாளர் பிரிவிலும் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க தான் தீர்மானித்துள்ளதாகவும் அதற்காக ஜனாதிபதிக்கு எனது மக்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தலைமையில் அபிவிருத்தி திட்டங்களுக்கு உறுதிக்கடிதம் வழங்கும் நிகழ்வு (27) கலாவெவயில் இடம் பெற்றது. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், விளையாட்டு கழகங்கள், மகளிர் சங்கங்கள், மத்ரஸாக்கள், சமய பாடசாலைகள், பாலர் பாடசாலைகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காகவே குறித்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டத்தின் 84 கிராமங்களில் உள்ள சங்கங்கள், நிறுவனங்களுக்கு தலா 05 இலட்சம் தொடக்கம் 10 இலட்சம் ரூபா வரையான பணம் இதன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு அது பற்றிய உறுதிப்படுத்தல் கடிதம் பாராளுமன்ற உறுப்பினரினால் உரிய அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன. இங்கு பௌத்த இந்து இஸ்லாம் மதத் தலைவர்கள், மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள், சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள்,முக்கியஸ்தர்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஹம்பாந்தோட்டை ஸாஹிராவில் இலவச விழிப்புணர்வு செயலமர்வு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டை வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளிலிருந்து இம்முறை க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்குமான இலவச விழிப்புணர்வு செயலமர்வு ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் (28) நடைபெற்றது. இந்த நிகழ்விற்கான அனுசரணையினை முஸ்லிம் ஏய்ட் நிறுவனம் வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.

ஹம்பாந்தோட்டை ஸ்மார்ட் சிட்டி குழுவோடு இணைந்து ஹம்பாந்தோட்டை இளைஞர்கள் மற்றும் யுவதிகள் குழுவினரும் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வில் வளவாளராக பஸ்லான் ஏ காதர் கலந்துகொண்டதோடு ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம். எம். எம். ரிஸான், பிரதி அதிபர் எம். சீ எஸ். பாயிஸா, யுவதிகள் குழுவின் தலைவி முன்னாள் பிரதி அதிபர் டி. யு. எஸ். அரூஸியா, ஆசிரியை என்.எப். நதீரா மற்றும் எம். ஏ. எப். அப்ராஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# புத்தளத்தில் நோன்பு பெருநாள் விளையாட்டு விழா

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பாரம்பரிய விளையாட்டுக்களை உயிர்ப்பூட்டும் வகையில் நோன்புப் பெருநாள் விளையாட்டு விழாவை எதிர்வரும் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 04 மணி முதல் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுகளும் நடைபெறவுள்ளன.

# துருக்கி தூதுவருக்கு பிரியாவிடை வைபவம்



இலங்கையில் தனது சேவைக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள இலங்கை மற்றும் மாலைதீவுக்கான துருக்கி தூதுவர் ரகிபே டிமெட் செகெர்சியோக்லுக்கு பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தனது இல்லத்தில் கடந்த 28 ஆம் திகதி பிரியாவிடை இராபோசன விருந்துபசாரமளித்தார்.

இந்த விருந்துபசாரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பஹீமுல் அஸீஸ், பங்களாதேஷ் தூதுவர் தாரிக் எம் டி அரிபுல் இஸ்லாம், பலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸுஹைர் எம்.எச்.டார் செயிட், கட்டார் தூதுவர் ஜாசிம் பின் ஜாபிர் ஜாசிம் அல் சொரூர், எகிப்து தூதுவர் மஜீட் மொஸ்லே, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெலிகம ஹப்ஸா மகளிர் கல்லூரியில் திடீர் தீ; மாணவிகளின் உடைமைகள் சேதம்

## பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)



வெலிகமையில் அமைந்துள்ள ஹப்ஸா மகளிர் அறபுக் கல்லூரியின் விடுதியில் மீண்டும் நேற்று முன்தினம் (29) திங்கட் கிழமை மாலை திடீரென தீப்பற்றியது. கடந்த மார்ச் மாதமும் இவ்வாறு இக் கல்லூரியின் விடுதிப் பகுதி தீப்பற்றிக் கொண்டமை தெரிந்ததே.

தீயணைக்கும் படையினர், பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் ஒன்றிணைந்து தீயை அணைத்தனர். கடந்த திங்கட் கிழமை முழுவதும் வெலிகம பகுதியில் திருத்த வேலை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. மேலும் காலநிலையும் அதி உஷ்ணம் இல்லாமல் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. இந் நிலையில் இவ்வாறான தீப்பிடிப்பு நிகழ்வு இடம்பெற்றமை சந்தேகத்துக்கு இடமானது என அவ்விடத்தில் குழுமியிருந்தவர்கள் பேசிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

கல்லூரியின் பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.ஓ. பத்ஹுர்ரஹ்மான் ( பஹ்ஜி) இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், கல்லூரியின் மூன்றாவது மாடியிலே இவ்வாறு திடீரென தீப்பற்றிக்கொண்டது. இதனால் கட்டடத்துக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மாணவிகளின் அனைத்து உடைமைகளும் தீப்பற்றி எரிந்துள்ளன. கடந்த மார்ச் மாதம் இதே பகுதியே இதே நேரத்தில் தீப்பற்றிக் கொண்டது. அச் சமயம் சேதமுற்றிருந்த பகுதிகளை 60 இலட்சம் ரூபா செலவில் திருத்தம் செய்ததோடு கடந்த 25ம் திகதி வியாழக்கிழமை மீண்டும் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையிலேயே நேற்று அதே கட்டடம் மார்ச் மாதம் தீப்பற்றிக் கொண்ட அதே நேரமே இவ்வாறு தீப்பற்றிக் கொண்டமையினால் இது சதிநாசகார வேலையாக இருக்கலாம் என சந்தேகப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பொலிஸாரும் குற்றப் புலனாய்வு பிரிவினரும் அதி தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகள் முடியும் வரை உறுதியாக எதுவும் கூற முடியாது என பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். இக்கல்லூரியில் 120 மாணவிகள் விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்பதோடு 10 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 மே 1 புதன்கிழமை

தினகரன் THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 18
ராகுகாலம் : காலை : 11.57 - 01.27வரை
சுபநேரம் : மாலை : 04.27 - 05.57வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை

## பொய்யான கூற்றுகளுக்கு ஏமாற வேண்டாம்

## பூகற்பவியலாளர்கள் குழு இன்று கள விஜயம்

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர், அதனுடன் தொடர்புபட்டதாக மண்சரிவுகளோ அல்லது வேறுபிரச்சினைக்குரியசூழ்நிலைகளோ இதுவரை பதிவாகவில்லை. மழையுடன் ஏற்படும் சிறிய நீரூற்றுக்களை காண்பித்து மக்களை தவறாக வழிநடத்த சிலர் முயற்சிப்பதாக மின்சக்தி மற்றும் வலு சக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத் தெரிவித்தார்.

உமா ஓயா பிரதேசத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் விரிசல்கள் மற்றும் நீர்க் கசிவுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பிப்பதற்காக பூகற்பவியலாளர்கள் குழுவொன்று இன்று (01) அப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொள்ளவுள்ள தாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதனைத் தெரிவித்தார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த,

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை நிறைவு செய்வதில் 09 வருடங்கள் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக நாட்டுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 09 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பு 587 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு 529 மில்லியன் டொலர்களாக பதிவு செய்யப்பட்டது.

ஆனால் கடந்த 09 வருடங்களில் உமா ஓயா திட்டத்தின் ஊடாக மின்சார உற்பத்தி மேற்கொண்டு அதனை தேசிய கட்டமைப்பில் சேர்க்க முடியாமல் போனதால் இத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகைக்கு நிகரான இழப்பை சந்திக்க வேண்டியிருந்தது. அத்துடன் உமா ஓயா திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்தியை தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த திட்டத்தினால் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக கூறி மக்களை தவறாக வழிநடத்தும் ஊடக நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக தெரிகிறது.

மழைக்கு பின் தோன்றும் சிறிய அருவிகளை காட்டி இந்த வளர்ச்சி திட்டத்தை சீர்குலைக்கும் பணியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இந்த திட்டத்துடன் தொடர்புடைய மண்சரிவு அல்லது வேறு எந்த சம்பவமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், உமா ஓயா பிரதேசத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் விரிசல்கள் மற்றும் நீர்க்கசிவுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக இன்று (01) பூகற்பவியலாளர்கள் குழுவொன்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அங்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், அதற்கெல்லாம் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகள் உள்ளன என்பதை அரசாங்கம் என்ற வகையில் நாங்களும் பொறுப்புடன் கூறுகிறோம்.

06

எம்.பிக்களின் வாகன இறக்குமதி கோரிக்கை

# ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்படும்; சபாநாயகர்

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது தொடர்பிலான கோரிக்கையை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குமாறு கோரி, சபாநாயகருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இக்கடிதத்தை தமக்கு அனுப்பியுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்கவே, மேற்படி கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாக சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 04 பிரதேசங்களில்

# தேசிய மக்கள் சக்தியின் மே தின கூட்டம் ஏற்பாடு

தேசிய மக்கள் சக்தி இன்று நான்கு இடங்களில் தொழிலாளர் தினத்தை கொண்டாடுகிறது.

இதற்கமைய இந்த பேரணித் தொடரின் முக்கிய பேரணி இன்று (01) அனுராதபுரம் பொது விளையாட்டரங்கில் பிற்பகல் 2:00 மணிக்கு நடைபெற உள்ளதாக கட்சி தெரிவித்துள்ளது.

வட மத்திய, வட மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கெஹெலிய தாக்கல் செய்த மனு மீதான உத்தரவு ஒத்திவைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்ற தீர்மானத்தை வழங்குவதை எதிர்வரும் மே மாதம் (07) வரை ஒத்தி வைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு தமக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செல்லுபடியற்றதாக்கக் கோரி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த ரிட் மனு தொடர்பிலேயே மேன் முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. நேற்றைய தினம் இதற்கான உத்தரவு வெளியாகும் என

06

# கட்டுநாயக்க விமான நிலையத்துள் புதிதாக தங்க நகைகள் வர்த்தகம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வலயத்தில் புதிய வர்த்தக வாய்ப்பாக தங்க நகை வர்த்தகத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான முன்மொழிவை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சமர்ப்பித்துள்ளது.

தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இவ்வசதிகள் இல்லாதுள்ளது. இதனால், உட்செல்லல்,வெளிச்செல்லல் வலயத்தில் "தங்க நகைக் கடையை" அமைப்பதற்கு வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய, பொருத்தமான செயற்பாட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறி முறைமையைக் கடைப்பிடித்து, விலைமனுக் கோரலை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இந்திய உயர் ஸ்தானிகர் இன்று ஒலுவில் விஜயம்

ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும்,அதன் அபிவிருத்தி தொடர்பில் மேலதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் இன்று (01) இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஒலுவில் செல்கிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின் பேரிலே, அவரது ஒலுவில் விஜயம் அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர், துறைமுக அதிகார சபை உயர் அதிகாரிகள் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொள்வர்.

வடக்கில் போலவே, கிழக்கு மாகாணத்திலும் ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், அப்பிரதேசத்தில் ஏற்படும் கடல் அரிப்பை கட்டுப்படுத்தவும் இந்திய அரசின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது.அங்கு தொழில் பேட்டை ஒன்றை நிறுவுவது தொடர்பிலும் இந்திய உயர் ஸ்தானிகருடன் பேச்சு நடத்தவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார்.

# மொனராகலையில் கோர விபத்து இருவர் ஸ்தலத்திலேயே பலி

மொனராகலை மாவட்டத்தின் செவனகல சந்தி, கினிகல்பலஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்விபத்து நேற்றுமுன்தினம் (29) இரவு இடம்பெற்நதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

செவனகல சந்தியிலிருந்து கினிகல்பலஸ்ஸ நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் செவனகல பிரதேசத்தை சேர்ந்த 35 வயது மற்றும் 46 வயதுடைய இருவரே உயிரிழந்தனர்.

இதேவேளை, அவிசாவளை கொழும்பு வீதியில் ரக்ஷபான சந்திக்கு அருகில் கார் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில், 34 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த நபரே உயிரிழந்தார்.

# தொலை தொடர்புகள் சட்டத்தில் திருத்தம்

லோரன்ஸ் செல்வநாயகம்

1991 / 25ஆம் இலக்க தொலைத் தொடர்புகள் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்த வகையில் இச்சட்ட மூலம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்புகள் திருத்த சட்ட மூலத்திற்காக சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடவும் பின்னர், பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரம்சிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

# வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா ? கிராமசேவகரிடம் விசாரிக்கவும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

வாக்காளர் பதிவு விபரங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது. 2007 ஜனவரி 31க்கு முன்னர் பிறந்தவர்கள் தமது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளதா? என்பதை ஆராயுமாறு ஆணைக்குழு பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக தத்தமது பகுதி கிராம சேவைஉத்தியோகத்தர்களிடம் விசாரித்து, அறிந்து கொள்ளுமாறும் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.




பட்டியலில் தமது பெயர் இல்லாதவர்கள் http://ec.lk/vrd என்ற இணையத்தளத்திற்குச் சென்று, விபரங்கள் தவறின்றி உள்ளதா என்பதை சரி பார்த்துக் கொள்ள முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் வாக்காளர்கள் இடாப்பு மறுபரிசீலனை பட்டியல், வாக்காளர்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டது.

சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் மற்றும் அனைத்து கிராம சேவைஉத்தியோகத்தர் அலுவலகங்களிலும் இது பார்வைக்கு வைக்கப்பட்டது.

அந்த வாக்காளர் இடாப்புகள் மே மாதம் (06) வரை காட்சிக்கு வைக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்திருந்தார்.

வீடு கொள்வனவு செய்த விவகாரம்;

# குற்றச்சாட்டுக்களிலிருந்து மஹிந்தானந்த விடுவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அழுத்கமகே, சகல குற்றச்சாட்டுக்களிலுமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

வீட்டைக் கொள்வனவு செய்த வழக்கு தொடர்பான குற்றச்சாட்டுக்க ளிலிருந்தே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.அமைச்சுப் பதவி வகித்தபோது வீடொன்றை கொள்வனவு செய்தமை தொடர்பாக அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம்சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

06

# தரமான அரசி விநியோகத்துக்கு அரசாங்கம் துரித நடவடிக்கை

## 11 மூடைகளில் மட்டுமே பிரச்சினை

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிக்கும் திட்டத்தின் கீழ்,34 இலட்சம் குடும்பங்களுக்கு தரமான அரசி விநியோகிக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளதாக, சமூக விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் 34,08,076 குடும்பங்களுக்கு ஏப்ரல் மாதத்துக்கான அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 91 சதவீதமானோருக்கு அரிசி விநியோகிக்கப் பட்டுள்ளது.குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் போசாக்கு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படு கிறது.

அரிசி விநியோகம் தொடர்பில் வடக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலிருந்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், சுகாதார திணைக்களங்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி விநியோகிக்கப்பட்ட சுமார் 34 இலட்சம் அரிசி மூடைகளில்,11 அரிசி மூடைகளில் மட்டுமே பிரச்சினைகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள து.அத்துடன், இரத்தினபுரி, முல்லைத்தீவு மற்றும் பதுளை மாவட்டங்களில் காலாவதியான திகதியுடன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.இவர்களின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மெதபிட்டிகம மற்றும் திக்வெல்ல ஆகிய கிராமங்களில் விநியோகிக்கப்பட்ட 07 அரிசி மூடைகளின் தரம் தொடர்பில் சிக்கல்கள் பதிவாகியுள்ளன.

06

# இ.தொ.காவின் 84ஆவது மேதின கொண்டாட்டம்

## கொட்டகலையில் பாரிய ஏற்பாடுகள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 84ஆவது மேதின விழா இன்று (01) கொட்டகலை பொது விளையாட்டு மைதானத்தில் காலை10 மணிக்கு நடைபெறவுள்ளதென, கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஊடகப்பிரிவு தெரிவித்துள்ள தாவது,

மேதினத்தை நாம் இம்முறை மிகுந்த நம்பிக்கையோடு வரவேற்கிறோம். பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை, அன்றாட, அத்தியாவசியத் தேவைகள், உரிமைகள், வேலைநேர நிர்ணயம், இன்ன பிற உரிமைகள் ஆகியவற்றை வென்றெடுக்க இந்த வெற்றித் தினத்தை தொழிலாளர் வர்க்க சிந்தனையோடு பங்கெடுப்போம்.

83 மேதினங்களை கொண்டாடிய பெருமை இ.தொ.காவுக்கும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் உண்டு. இந்தவகையில் இந்தமே தினம் சிறப்பாக அமையவும்,சகல எமது அங்கத்தவர்களின் பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

மேதின விழாவில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும், நிதிச்செயலாளரும், தோட்ட உட்கட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்ட இ.தொ.கா பிரதித் தலைவர்கள், சகல உபதலைவர்கள், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள், தோட்டத் தலைவர், தலைவிகள், இளைஞர், யுவதிகள் அணியினர், அங்கத்தவர்கள் எமது இ.தொ.கா உத்தியோகத்தர்கள் ஆகியோரும் பெருமளவில் இதில் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இதேவேளைஇதில் சிறப்பம்சமாக உள்நாட்டு, வெளிநாட்டுஊடகவியலாளர்களும் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றையதினம் இ.தொ.காவின் மாபெரும் பேரணி கொட்டகலை நகரில் இருந்து மலையககலை, கலாசார நிகழ்வுகளுடனும், ஊர்திகளுடனும்; பிரதானமேடையை நோக்கி வந்தடையவுள்ளனர். இதற்கானசகல ஏற்பாடுகளையும் இ.தொ.காவின் மேதின ஏற்பாட்டுக்குழு ஒழுங்கு செய்துள்ளதாக ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

தம் குழந்தைகளைத் தழுவி மகிழ்வது உடலுக்கு இன்பத்தையும், அந்தக் குழந்தைகளின் மழலை மொழி கேட்பது செவிக்கு இன்பத்தையும் வழங்கும்.

## நீண்ட காலத்தின் பின்னர் சுமுகமான மேதின விழா!

தொழிலாளர் தினம் இன்றாகும். உலக தொழிலாளர் தினமாக சர்வதேச மேதினம் விளங்குகிறது. உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளை உறுதிப்படுத்த அடித்தளமாக அமைந்த தினமே இது. குறிப்பாக தொழிலாளர்களுக்கு நாளாந்தம் வேலைக்கான நேரம் எட்டு மணித்தியாலங்களாக அங்கீகரிக்கப்பட்ட தினமாக விளங்கும் இத்தினம் தொழிலாளர்களின் உரிமைகள், அபிலாஷைகளை உறுதிப்படுத்தும் நாளாகவும் விளங்குகிறது.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இத்தினத்தை வியர்வை சிந்தி உழைக்கும் அனைத்து தொழிலாளர்களும் சிறப்பாகவும் வெகுவிமரிசையாகவும் வருடா வருடம் கொண்டாடுகின்றனர். அந்த வகையில் இவ்வருடமும் இத்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதிலும் குறிப்பாக இலங்கையில் இம்முறை இத்தினத்தை வெகுசிறப்பாகக் கொண்டாடுவதில் உச்சபட்ச கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் இச்சமயம் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அவற்றில் ஒன்று கடந்த சில வருடங்களாக இந்நாட்டில் தொழிலாளர் தினத்தை சிறப்பாகக் கொண்டாட தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் 19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக கடந்த சில வருடங்களாக மேதினத்தை சுதந்திரமாகவும் வெகுவிமரிசையாகவும் கொண்டாட முடியவில்லை.

ஆனால் இம்முறை நாட்டில் அவ்வாறான இடையூறுகள் எதுவும் இல்லை. அதன் பயனாக இத்தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதில் தொழிலாளர்கள் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர்.

அதன் பயனாக இம்முறை நாடெங்கிலும் 40 மே தினக்கூட்டங்கள் இடம்பெறுகின்றன. அவற்றில் 14 ஊர்வலங்களும் கூட்டங்களும் தலைநகர் கொழும்பை மையப்படுத்தியதாக நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் கொழும்பில் நடாத்தப்படும் மே தினக்கூட்டங்களும் ஊர்வலங்களுமே முக்கியத்துவம் பெற்றதாக விளங்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏனென்றால் இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் நாட்டில் முக்கிய தேர்தல் ஒன்று நடத்தப்பட இருக்கிறது. அந்த தேர்தலை முன்னிட்டு ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் செல்வாக்கையும் பலத்தையும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இத்தினத்தைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றன. அந்தப் பின்னணியில் தான் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் இம்முறை மே தின ஊர்வலங்களையும் கூட்டங்களையும் கொழும்பில் நடாத்துவதற்கு ஏற்பாடுகளை முன்னெடுத்து இருக்கின்றன.

இவ்வாறான சூழலில் இந்த தொழிலாளர் தினத்தில் தலைநகர் கொழும்பு விழாக்கோலம் பூண்டுள்ளளது. ஒவ்வொரு அரசியல் கட்சியினதும் கொடிகளும், பதாகைகளும் தலைநகரெங்கும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் ஒவ்வொரு கட்சியும் தாங்கள் ஏற்பாடு செய்திருக்கும் ஊர்வலம் மற்றும் கூட்டத்தில் பங்குபற்றுபவர்களில் எண்ணிக்கையை அதிகளவில் காட்டிக் கொள்வதில் அதிக கவனம் எடுத்துக் கொண்டுள்ளன. அதனால் ஆதரவாளர்களையும் அபிமானிகளையும் கொழும்புக்கு அழைத்து வருவதிலும் இக்கட்சிகள் இறுதிக்கட்ட ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

இவ்வாறு பெரும் எடுப்பில் இந்த மேதின ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் இவ்வருட மேதின ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களுக்காக ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் மேல் செலவிடப்படுவதாக உத்தியோகப்பற்ற தரவுகளின் மூலம் தெரியவந்துள்ளது. இதன் நிமித்தம் இறுதிக்கட்ட நிதி திரட்டல்களையும் சில கட்சிகளின் ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த மே தினக்கூட்டங்களில் பங்குபற்றும் ஆதரவாளர்களுக்கும் அபிமானிகளுக்கும் உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் அத்தேர்தலில் எந்தக் கட்சியின் அபேட்சகருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்தும் கூட சில கட்சிகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. அத்தோடு இன்றைய மேதினக் கூட்டங்களின் போது கட்சி தாவல்களும் இடம்பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்றதாக விளங்கும் இலங்கையின் இம்முறை மேதினம் இந்நாட்டின் வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஆகவே நாட்டுக்கும் மக்களுக்கும் மறுமலர்ச்சியையும் பொருளாதார சுபீட்சத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கான வித்தூன்றும் நாளாக இத்தினம் அமைய வேண்டும். அதுவே அனைத்து தொழிலாளர்களதும் எதிர்பாரப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# தொழிலாள வர்க்கத்தினரின் குறைகளை தீர்க்க வேண்டும்!

## தொழிலாளர்களுக்கு மேதின வாழ்த்துகள்




'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதே தொழிலாளி வர்க்கத்தின் தாரக மந்திரம். உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உயிர்களைப் பணயம் வைத்துப் போராடியவர்கள் சிகாகோவில் மட்டுமன்றி எமது நாட்டிலும் உள்ளனர். உரிமைகளுக்காக உயிரைக் கொடுத்தவர்களும் உள்ளனர்.

தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் வேலைநேரக் குறைப்பை வலியுறுத்தும் போராட்டங்கள் புரட்சியாக 18 ஆம் நூற்றாண்டில் வலுப்பெற்றன. 14 ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும், 15 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸிலும் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் போராட்டங்கள் வெடித்தன.

மேதினத்தின் தொடக்கத்தை இரண்டு முக்கிய புரட்சிகள் மூலம் அறிய முடிகின்றது. 1776 இல் அமெரிக்காவில் ஏற்பட்ட தொழிலாளர் புரட்சி; அங்கு 13 மாநிலங்களில் புரட்சி வெடித்தது. இதனையடுத்து சிகாகோ தொழிலாளர் புரட்சி 1885 இல் ஆரம்பமாகி 1886 இல் மேதினமாக முதலாம் திகதியில் முடிவுற்றுள்ளது.

எட்டு மணி நேர வேலை தொடர்பான போராட்டம் 1886 இல் சிகாகோவில் வெற்றியளித்ததோடு, மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1877 இல் சிகாகோவில் நாடு தழுவிய தொழிலாளர்கள் புரட்சி ஆரம்பமானது. அந்தப் புரட்சியில் பல உயிர்கள் பலியாகி, பலர் காயமுற்ற போதும் எந்த நோக்கத்திற்காக அந்த புரட்சி ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

1886ஆம் ஆண்டு மே முதலாம் திகதியில் 88,000 தொழிலாளர்களின் பங்கேற்புடன் 'எட்டு மணித்தியாலம்' போராட்டம் ஆரம்பமானது. 307 நிறுவனங்களின் தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் குதித்திருந்தனர்.

அடக்குமுறை அதிகரித்தது. எனினும் போராட்டம் தொடர்ந்தது. புரட்சி வெடித்து இறுதியில் தொழிலாளர்களின் கோரிக்கை வெற்றிகண்டது.

வருடா வருடம் மேதினம் அனுஷ்டிக்கப்பட்ட போதும் தொழிலாளர்களின் தேவைகள், உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு விட்டதா என்ற கேள்விகளோடு தான் இதுவரை மேதினமான தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தன் உழைப்பை நாட்டின் முன்னேற்றத்திற்காக வழங்கி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைக்கும் தொழிலாளர்களின் ஏக்கங்களும் பெருமூச்சுக்களும் தொடர்கின்ற போதும் அவற்றுக்கான தீர்வுகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள், ஆடைத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள், தனியார்துறை தொழிலாளர்கள் என பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழிலாளர் வர்க்கத்தினரைக் காண முடிகிறது. இவர்களில் ஒவ்வொரு துறை சார்ந்தவர்களுக்கும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் உள்ளன.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களது அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படாத நிலையே காணப்படுகிறது. காடுகளிலும் மேடுகளிலும் நேரம், காலம் என பாராது அர்ப்பணிப்புடன் உழைக்கும் அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது அவசியம்.

தேர்தல் கால வாக்குறுதிகளாக மட்டுமே வீடுகளும், சொந்தக் குடியிருப்புகளும் பிரதேச பாதைகளும், மின்சாரமும் சுத்தமான குடிநீரும் இருந்து வருகின்றதே தவிர அவற்றை தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிப்பதாகத் தெரியவில்லை. சம்பள அதிகரிப்பும் இழுபறியிலேயே உள்ளது.

மேதினம் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கமும் அதன் அர்த்தமும் காண முடியாதவையாகிப் போய்விட்டன.

விவசாயத் தொழில், கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளோரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வரட்சி, வெள்ளம், பசளைகளின் விலையுயர்வு என பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு தமது விளைச்சலை கரைசேர்ப்போர் நெல்லை நியாயமான விலையில் கொள்வனவு செய்வதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன. மரக்கறிச் செய்கையாளர்களின் சிக்கலும் இதுவேயாகும்.

உழைக்கும் வர்க்கத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதன் மூலமே நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்பதை மறந்து விடலாகாது. பாட்டாளி மக்கள் அனைவருக்கும் இன்றைய தினத்தில் மேதின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கிழக்கு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் மூவின பாரம்பரிய பண்டிகை நல்லிணக்கவிழா

கிழக்கு இளைஞர்கள் அமைப்பானது நிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பு மற்றும் MYOWN நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இனநல்லுறவை ஏற்படுத்தும் வகையிலான சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாரம்பரிய கலைநிகழ்வு சம்மாந்துறை பொதுமைதானத்தில் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் தலைவரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான தானீஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவர், மயோன் நிறுவனத்தின் பணிப்பாளர் நிஸ்லி முஸ்தபா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் நஸ்மி மூஸா, நிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் செயலாளரான திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்ஜவாஹிர், சம்மாந்துறை கோரைக்கார் தமிழ் மகாவித்தியாலய அதிபர் எஸ். இளங்கோபன், கவிதாயினி டொக்டர் ஜெலீலா முஸம்மில் மற்றும் கலைமன்றங்களின் தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# யாழ்நகரில் மனத்தூய்மைக்கான இலவச தியானப் பயிற்சி



பர்மாவைச் சேர்ந்த C.G. கின் அவர்களிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் ச.கோயங்கா அவர்களால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றி அங்கு அறிமுகம் செய்து வைக்கப்படும்.

குருஜி எஸ்.என்.கோயங்கா அவர்களின் வழிகாட்டலில் பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ், பண்டதரிப்பு, யாழ்ப்பாணத்தில் மே 27 ஆம் திகதி முதல் ஜூன் 07 ஆம்திகதி வரை பத்து நாட்கள் தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இவர்களது இலவசப் பயிற்சிநெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். விபாசனா தியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் 0716439454, 0773504491, 0774935850 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். மேலும், www.sobha.dhamma.org என்றஇணையத்தில் முன்பதிவு செய்து கொள்ளவும் முடியும். மனத்தூய்மைக்கான இந்த இலவச தியான பயிற்சிநெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

எச்.எச்.விக்கிரமசிங்க...

# சவூதி-இலங்கை பொருளாதார நல்லுறவுக்கு வழிவகுத்த சர்வதேச பொருளாதார மாநாடு

சவூதியின் தற்போதைய மன்னர் சல்மான் அவர்களது அரசாங்கம் நாட்டு மக்கள் தமது அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான சகலவிதமான திட்டங்களையும் நுணுக்கமான முறையில் நிறைவேற்றி வருகின்றது.

முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் தூரநோக்கு, இராஜதந்திர நகர்வு, வலுவான பொருளாதார சிந்தனை போன்றவற்றை உள்ளடக்கிய 'விஷன் 2030' என்ற மூலோபாய திட்டத்தின் மூலம் சவூதி அரேபியா விஞ்ஞானம், மருத்துவம், சுற்றுலா, பொருளாதாரம் என முக்கியமான துறைகளில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. சவூதி பொருளாதாரம் அசுர வளர்ச்சியடைந்து வலுவான நிலையில் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

முடிக்குரிய இளவரசரின் விஷன் 2030 திட்டமானது சவூதி அரேபியாவின் பொருளாதாரத் துறையை ஸ்திரமாக்குவதுடன் அதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்ய தேவையான சீர்திருத்தங்களை கொண்டுள்ளது.

அதன் பயனாக சர்வதேச பொருளாதார மன்றத்தின் முதல் மாநாட்டை இவ்வருடம் நடத்தும் தகுதியினை சவூதி அரேபியா பெற்றிருக்கின்றது.





இந்த மாநாடு தலைநகர் ரியாத்தில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்திருக்கின்றது. இந்த மாநாட்டில் சர்வதேச ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் ஆற்றல் போன்ற பல முக்கியமான விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதில், சர்வதேச நிறுவனங்கள், அரசுசார் துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிகத் துறையைச் சேர்ந்த சர்வதேச வல்லுநர்கள், சிந்தனையாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். தற்போதைய உலகளாவிய சவால்களைப் பற்றி இவ்வல்லுனர்கள் கலந்துரையாடி, உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துதவதையும், குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை காணும் நோக்கோடு சர்வதேச கூட்டு முயற்சிகள் மேற்கொள்வதையும் ஊக்குவித்துள்ளனர்.

இம்மாநாட்டில் இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பங்கேற்றிருந்ததுடன் சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் பைசல் பின் பர்ஹான் அவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றிலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

1974 முதல் சவூதி அரேபியாவுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வரும் இலங்கையின் பொருளாதாரத்தில் சவூதியின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. நீர், எரிசக்தி, சுகாதாரம், வீதிகள் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களுக்காக பாரிய உதவிகளை சவூதி இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அதேசமயம் கடந்த வருட நவம்பர் மாதம் சவூதி அரேபிய பொருளாதார அமைச்சர் பைசல் அல்இப்ராஹிம் இலங்கைக்கான விஜயமொன்றை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் தலைமையில் சர்வதேச பொருளாதார மையத்தின் முதல் மாநாடு நடைபெற்று முடிந்துள்ள நிலையில் இலங்கை _சவூதி நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகள் மேம்படும் என்றும் சவூதி அரேபிய வர்த்தகர்கள், முதலீட்டு நிறுவனங்கள் இலங்கையில் பல துறைகளிலும் முதலீடு செய்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அபூ அரீஜ்...

# வறிய மக்களில் அக்கறை கொண்டு பணியாற்றியவர் அமரர் பிரேமதாச

இலங்கையின் ஜனாதிபதிகளில் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் அமரர் ரணசிங்க பிரேமதாசஆவார். அவர் இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியாக 1989 முதல் 1993 இல் படுகொலைசெய்யப்படும்வரை பதவி வகித்தார். அவர் தனது ஜனாதிபதி பதவிக்கு முன்னர் 1978 முதல் 1989 வரை இலங்கையின் பிரதமர் பதவியை வகித்தவர். அவர் நீண்ட மற்றும் அனுபவம்மிக்க அரசியல் வாழ்க்கையைக் கொண்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாசவின் 31ஆவது நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. இவர் 1993 இல் கொழும்புநகரில் நடைபெற்றமேநாள் பேரணிஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பன்மைத்துவ சமூகத்திற்குள் பன்மைத்துவ கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தார். இன,மொழி மற்றும் மதஅடிப்படையில் இலங்கை மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க சவால்கள் எதிர்கொள்ளப்பட்ட பொழுது, பிரேமதாச அரசியல் கொள்கையாக்க செயன்முறையில் எல்லா சமூகமும் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தார்.

அரசியல் மற்றும் சமூகத்துறைகளில் அனைத்து சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் மற்றும் பங்களிப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டகொள்கைகளை அவர் செயற்படுத்தினார். வறுமை மற்றும் சமூக சமத்துவமின்மைக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத்தினார். ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தைஉயர்த்த வீட்டுவசதித் திட்டங்கள், கல்வித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களைச் செயற்படுத்தினார். மிகவும் சவால் நிறைந்த ஒரு காலத்தில் துணிந்து செயற்பட்டு இந்நாட்டு மக்களின் விடிவிற்காக அயராது உழைத்தார்.

அமரர் பிரேமதாச ஆற்றிய பணிகள் அளப்பரியவை. இவர் ஆற்றிய பணிகளுக்காக இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 1986 இல் இவருக்கு'சிறீலங்காபிமான்ய' என்ற இலங்கையின் அதியுயர் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் இலங்கையின் பொருளாதாரம்,க

**31 ஆவது நினைவுதினம் இன்று**

லாசாரம், இனநல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்காக ஆற்றிய சேவைகள் என்றென்றும் போற்றப்பட வேண்டியவைஆகும்.

வறுமை ஒழிப்பு திட்டத்தினைக் கொண்டு வந்து ஏழ்மையைக் குறைப்பதற்கும் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நலத்திட்டங்களை பிரேமதாசா செயற்படுத்தினார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடு மற்றும் பிறஉதவிகளை வழங்கும் 'ஜனசவிய' திட்டம் போன்ற வீட்டுத் திட்டங்களை அவர் தொடங்கினார். விளிம்புநிலை சமூகங்களுக்கான கல்வி மற்றும் சுகாதாரசேவைகளை விரிவுபடுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார்.



தொழில் கட்சியில் இருந்து அரசியலுக்கு பிரவேசித்த ரணசிங்க பிரேமதாச கொழும்பு மாநகரசபை உறுப்பினராகத் தெரிவாகி, பிரதிமேயராகவும் பதவியேற்று பின்னர் 1965 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு சென்று உள்ளூராட்சி அமைச்சராகவும், பிரதமராகவும் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவிவகித்தார். இவர் பிரதமராக இருந்த போது'செமடசெவன அனைவருக்கும் நிழல்' எனும் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து பணியாற்றியவர். இதனால் எத்தனையோ ஏழை மக்கள் பயனடைந்தனர். வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இவர் கம் உதாவ, உதாகலகம்மான ஆகிய முன்மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் ஊடாக இன மற்றும் மதவேறுபாடின்றி அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பல திட்டங்களை மேற்கொண்டார்.

நகரஅபிவிருத்தித் திட்டத்தையும் செயற்படுத்தினார். பிரேமதாசவின் தலைமையின் கீழ் குறிப்பாக கொழும்பில் நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும், நகர்ப்புற வசதிகளை மேம்படுத்தவும் திட்டங்களைத் தொடங்கினார்.

அமரர் பிரேமதாசதொழில்துறை மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளைநடைமுறைப்படுத்தினார். வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதிலும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதிலும் பொருளாதாரத்தை நவீனமயமாக்குவதிலும் கவனம் செலுத்தினார்.

ஆடை உற்பத்தித் தொழிற்சாலை திட்டங்கள் மூலமும் வறிய மக்களுக்காக ஜனசவிய திட்டத்தின் மூலமும், பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மூலமும்,சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்துவதற்கான மதியஉணவுத் திட்டத்தின் மூலமும் நாட்டின் அபிவிருத்தியையும் ஏற்றுமதி வருமானத்தையும் மேம்படுத்த முன்னின்றுஉழைத்தார். ஜனசவிய வறுமைஒழிப்புத் திடடம் தெற்காசியாவின் முதன்மையான வறுமை ஒழிப்புத் திடடமாக சர்வதேசஅளவில் போற்றப்பட்டது. அவரதுசேவைக்கு அங்கீகாரமளிக்கும் வகையில், 1987 ஆம் ஆண்டைஉலககுடியிருப்பு வருடமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.

சமாதான முயற்சிகளைத் தொடக்கி இனப்பிரச்சனைக்குபேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காணமுயன்றார். புலிகளுடன் மோதல்கள் நடந்து கொண்டிருந்த போதிலும் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் நோக்கில் சமாதான முயற்சிகளை பிரேமதாச தொடங்கினார். இதன் மூலம் சிறுபான்மை சமூகங்களின் குறைகளை நிவர்த்தி செய்ய முயன்றார்.

ஆயினும் இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நாட்டு மக்களின் எண்ணங்களில் நிலைத்திருக்கும் சிறந்த தலைவராக ரணசிங்க பிரேமதாச என்றும் போற்றப்படுகின்றார்.

**கலாநிதி ச. பாஸ்கரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசறிவியல் துறை
பேராதனை பல்கலைக்கழகம்

# சிட்னியில் சிறப்புற நிகழ்ந்த சித்திரைத் திருவிழா

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாக சிட்னி தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது. தமிழிசை, தமிழ் கலை, நாட்டுப்புறக் கலைகள், மரபுசார்ந்த கலைகள், தமிழர் வீர விளையாட்டுகள் அனைத்தையும் தற்போதுள்ள தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லும் அரிய பணியை செய்து வருகிறார்கள்.

கடந்த 28.4.2024 அன்று சிட்னி நகரில் சித்திரைத் திருவிழாவை சிறப்பாக நடத்தினார்கள். கலைநிகழ்ச்சியில் மாணவ மாணவிகள், குழந்தைகள், பெரியவர்கள் உட்பட அனைவரும் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டினார்கள். பழங்கால தமிழ்நாட்டு விளையாட்டுகளும் நடைபெற்றன.

அனைவருக்கும் தமிழரின் மரபு உணவு வகைகள் பரிமாறப்பட்டன. இந்நிகழ்ச்சியை மன்றத்தின் நிர்வாகிகள் கோச்சடை முத்தரசு, சத்தியசீலன், பேரின்பமூர்த்தி, பழனி, வனிதா முத்துசாமி, மதன்குமார், உலோகன், மதன்சத்தியமூர்த்தி, பார்த்திபன், வைஷ்ணவி பிரியா, கரிகால்வளவன், ராஜேஷ், நந்தா கோவிந்தன், நித்தியா,






வெங்கி உட்பட பலர் சிறப்பாக நடத்தினர். ஏராளமான தமிழ் மக்களும், அவுஸ்திரேலிய நாட்டு அரசு அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சிட்னி தமிழ் மன்றமானது அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். சிட்னி தமிழ் சமூகம், தமிழ்நாட்டிலும், தென்னிந்தியாவிலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மியான்மர், சீஷெல்ஸ், மொரிஷியஸ், பிஜி ஆகிய நாடுகளில் வாழும்




புலம்பெயர் தமிழர்களிடமும் அதன் தோற்றம் மற்றும் பாரம்பரியத்தை போற்றும் அதேவேளையில், அவுஸ்திரேலிய சமூகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதில் பெருமை கொள்கிறது.

இலக்கியம், நாட்டுப்புற கலைகள், கலாசார விழாக்கள், இசை மற்றும் நாடகம், பாரம்பரிய நடனம் மற்றும் பாரம்பரிய இசை மூலம் தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதே தமிழ்ச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நூல்கள் அன்பளிப்பு வைபவம்



பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதன் ஓர் அங்கமாக பொது நூலகங்களை வலுவூட்டல் திட்டமானது பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத்தீன் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகின்து.

இதற்காக SERLIN தென்கிழக்குப் பிராந்திய நூலக தகவல் வலையமைப்பானது பெரும் பங்காற்றி வருகின்றது. இந்த வகையில் உலகப் புத்தக தினத்தை கொண்டாடும் முகமாக தென்கிழக்குப்பல்கலைக்கழக நூலகமானது தெரிவு செய்யப்பட்ட 08 நூலகங்களுக்கு சுமார் 733 புத்தகங்களை வழங்கி சிறப்பித்தது.

இதற்கான நூல்களை அவுஸ்திரேலியாவிலுள்ள YM TRUST நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர்.

இதுவரை இந்நிறுவனமானது சுமார் 6341 புத்தகங்களை 04 கட்டங்களாக வழங்கியுள்ளது. அனைத்து நூலகளும் இப்பிரதேசத்திலுள்ள 25 பொதுநூலகங்களுக்கும் 55 பாடசாலை நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூல்களின் மொத்தப் பெறுமானம் சுமார் 08 மில்லியன் ரூபா ஆகுமென சிரேஷ்ட உதவி நூலகரும் வெளிக்களப்பயிற்சி இணைப்பாளருமான எம்.சி.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பின்வரும் நூலகங்கள் நூல்களைப் பெற்றுக்கொண்டன. நிந்தவூர் பொது நூலகம், சாய்ந்தமருது பொதுநூலகம், வாசிப்பு நிலையம் வீரமுனை, பொதுநூலகம் ஒலுவில், அல்ஹம்றா வித்தியாலயம் ஒலுவில், சம்மாந்துறை அமிர் அலி வித்தியாலயம், மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை பொதுநூலகம்



மேற்படி நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்,கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், பிரயோக விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி எச்.எம். ஹாறுன், நூலகர் எம்.எம். றிபாயுத்தீன் மற்றும் பதிவாளர், நிதியாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

# கல்முனையில் மக்கள் மனங்களை வென்ற ஓய்வுநிலை அதிபர் மர்ஹூம் எம்.எச்.ஏ.காதர்

கல்முனை மண்ணுக்குக் கிடைத்த ஆளுமைகளில் ஒருவர்தான் ஓய்வுபெற்ற அதிபர் மர்ஹூம் எம்.எச்.ஏ.காதர் அவர்கள். தனது வாழ்நாளின் பெரும்பகுதியை கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்காக அர்ப்பணித்த அன்னார் தனது 88வது வயதில் அண்மையில் காலமானார்.

மீராமுகைதீன் மற்றும் ஆதம் பாவா சாருவும்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரான அன்னார் 1935.06.15ஆம் திகதி கல்முனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கல்முனைக்குடி அல்அஷ்ஹர் வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை பற்றிமா மற்றும் கல்முனை ஸாஹிறா கல்லூரிகளிலும் கற்றார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள அட்டுலுகம பிரதேச முஸ்லிம் பாடசாலையில் 1956ஆம் ஆண்டு தனது 21வது வயதில் ஆசிரியராக நியமனம் பெற்ற அன்னார் பின்னர் அநுராதபுரம் மடாட்டுகம முஸ்லிம் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1961, 1962 கல்வியாண்டில் ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்தார்.



பின்னர், அம்பாறை மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலும் பயிற்றப்பட்ட ஆசிரியராக பணியாற்றினார். தான் கடமையாற்றிய பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும், மாணவர்களின் கல்வி விருத்திக்கும் தன்னாலான அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளார். அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் நியமனம் பெற்ற அன்னார், கல்முனை உவெஷ்லி உயர்தரப் பாடசாலை ஆரம்பப் பிரிவு, கல்முனை அல்பஹ்ரியா மகா வித்தியாலயம் மற்றும் நற்பிட்டிமுனை அல்அக்ஷா மகாவித்தியாலயம் என்பனவற்றில் அதிபராகக் கடமையாற்றி அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கினார்.

'காதர் சேர்', 'காதர் மாஸ்டர்' என கல்முனைப் பிரதேசத்தில் அன்புடன் அழைக்கப்பட்ட அன்னார், கல்விப் பணிக்கு அப்பால் சமூக சேவையிலும் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்தார்;. 1995ஆம் ஆண்டு அதிபர் சேவை ஓய்வைத் தொடர்ந்து சமாதான நீதவானாக, மத்தியஸ்த சபை உறுப்பினராக, சமூகசேவை அமைப்புக்களின் உறுப்பினராக, ஆலோசகராக என பல பதவிகளை வகித்து சமூகப் பணியில் தன்னை முழு்மாயக ஈடுபடுத்திக் கொண்டார்.

இவ்வாறு, கல்விப் பணியிலும், சமூகப் பணியிலும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட ஓய்வுநிலை அதிபர் காதர் அவர்களின் மறைவு பலருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

**முகம்மட் றிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# பேராசிரியர் நிர்மலாதேவிக்கு 10 ஆண்டு சிறை!

கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்திய வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட தமிழ் நாடு பேராசிரியர் நிர்மலாதேவிக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நிர்மலாதேவி தரப்பு வழக்கறிஞர் சுரேஷ் நெப்போலியன் வாதிடுகையில், "நிர்மலா தேவியால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் புகார் அளித்த மாணவிகள் சமூகத்தில் எந்த வகையிலும் ஒடுக்கப்படவும் இல்லை, ஒதுக்கப்படவும் இல்லை. அவர்கள் சராசரி மனிதர்களாகவே இயல்பாக வாழ்ந்து வருகின்றனர். நிர்மாதேவியால் அவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. எனவே நிர்மலாதேவிக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.



இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி பகவதியம்மாள், பேராசிரியர் நிர்மலாதேவிக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பதாக அறிவித்தார். மேலும், ரூ.2.45 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

# மீகொட மகா வித்தியாலயம் பெயர் மாற்றம்

ஹோமாகமவின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் மறைந்த அரசியல்வாதியுமான காமனி ஜயசூரியவின் நூற்றாண்டு நினைவு தினத்தையிட்டு மீகொட மகா வித்தியாலயத்துக்கு "காமனி ஜயசூரிய வித்தியாலயம்" என பெயரிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் அழைப்பின் பேரில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பெயர் பலகை திறப்பு விழா நடைபெற்றது. ஹோமாகம பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் பிரதேச அபிவிருத்திக் குழுவின் ஊடாக விடுக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கு அமைய காமனி ஜயசூரிய வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பாடசாலையில் விசேட திறமைகளை வெளிக்காட்டிய மாணவ மாணவிகள் மற்றும் பழைய மாணவர்களுக்கு விசேட சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, ஹோமாகம வலயக் கல்விப் பணிப்பாளர் ஹேமந்த கமகே, கல்லூரி அதிபர் எம். சி. திலகானந்தா மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள், உள்ளூர் பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.








இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இங்கு இடம்பெற்ற தீர்த்தோற்சவ நிகழ்வின் போது சுவாமி தீர்த்தோற்சவம் காண எழுந்தருளி வருவதனையும் பக்தர்களின் பாற்குடபவனி இடம்பெறுவதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வி. குமார்)

## நாட்டை முன்னேற்றுவதிலுள்ள...

வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோது உழைக்கும் மக்களே அதிகமான சவால்களை எதிர்கொண்டனர்.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதில், விடாமுயற்சியுடன் பங்காற்றி வரும் உழைக்கும் மக்களுக்கு எனது நன்றிகள்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செய்யும் இந்த எல்லையற்ற அர்ப்பணிப்பின் பலன்களை நாட்டில் கண்டுகொள்ளலாம்.நாட்டின் பொருளாதாரம் தற்போது வளர்ச்சியடைந்து, பணவீக்கத்தை கணிசமான அளவிற்கு குறைத்து, ரூபாயை பலப்படுத்த முடிந்திருப்பது அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

உழைக்கும் மக்களை தொடர்ந்தும் வறியவர்களாகவே வைத்திருப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. போராட்டமின்றி அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக 'அஸ்வெசும' மற்றும் 'உறுமய' திட்டங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் அவர்களின் மேம்பாட்டிற்காக பரந்துபட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலையிலும் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தனியார் துறையினரும் முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

## தொழில் உரிமைகளை பாதுகாக்க...

ஒரு தருணத்திலேயே இத்தினத்தை கொண்டாடுகிறோம். எத்தகைய உடன்படிக்கைகளுக்கு மத்தியிலும் தொழிலாளர் உரிமைகளை புறக்கணிக்கும் வகையில், நாங்கள் செயற்படவில்லை. உழைக்கும் மக்களுடனான உரையாடல்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் அடிப்படையிலேயே தொழிற்சூழலை முடிவு செய்கிறோம்.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்ட நாடுகள், உழைக்கும் மக்களின் பலத்தினாலே மீண்டெழுந்தன. இவ்வாறு பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உழைக்கும் மக்கள் தொடர்ந்து வழங்கிய அர்ப்பணிப்புகளுக்கும் பங்களிப்புகளுக்கும் எனது விசேட மரியாதையை செலுத்துகிறேன். இதன் மூலம் எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

அரச துறை, தனியார் துறை மற்றும் சுயதொழில் போன்றவற்றை பொருளாதார சக்திகளாக வலுப்படுத்த பாடுபடுவோம்.

உழைக்கும் மக்கள் அரசாங்கத்துக்கும், அரசாங்கம் உழைக்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுத்த வெற்றிகள் ஏராளம். இந்த வெற்றிகளோடு இக்கட்டான சவால்களை முறியடிக்க உழைக்கும் மக்களின் உறுதியுடன் இன்று நாம் அடைந்துள்ள நிலையைப் பாதுகாக்க பாடுபடுவோம்.

## உழைப்புக்கான பெறுமதியை...

இல்லாமலே, இந்த ஆண்டும் மே தினத்தை கொண்டாட நேரிட்டுள்ளது.

போலியான அலை ஊடாக திறமையற்றதொரு ஜனாதிபதியை பதவியில் அமர்த்தி நாடே வங்குரோத்து நிலைக்கு தள்ளியது. எஞ்சியதை மக்கள் ஆணையை இழந்த நிழல் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இவ்வாறான நிலையில் உழைக்கும் மக்கள் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் நிலையில், தற்போதுள்ள வாழ்க்கைச் செலவுக்கு சற்றும் பொருந்தாத சம்பளத்தால் வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் மிகவும் கஷ்டப்படுகிறது.

நாட்டின் பொருளாதார இயக்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் பல்லாயிரக் கணக்கில் மூடப்பட்டு வருவதால், வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் தலைவர்களெனக் கூறிக் கொள்பவர்கள் கூட வாய் திறக்காதுள்ளனர். நாட்டின் மாற்று அரசாங்கமாகிய நாம் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம்.

இப்போது தேர்தல் ஆண்டுக்கு வந்திருக்கிறோம். இம்முறையும் ஏமாற்று பேரணிகளுக்கு ஏமாறாமல் நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் சொந்த காலில் நிற்கச் செய்யும் பொறுப்புக் கூறக் கூடிய அரசாங்கத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்காக அர்ப்பணித்துச் செயற்படும் அரசாங்கத்தையும், தலைவரையும் நியமித்து மீண்டும் ஒரு நாடாக எழுந்து நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

இதனை அடையும் பொருட்டு, இன, மத, சாதி வேறுபாடின்றி நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## சிறுவர் துன்புறுத்தல்களுக்கு...

சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் இந்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் ஊடகங்கள் மூலம் சிறுவர்களுக்கு வழங்கப்படும் மனிதாபிமானமற்ற பல்வேறு தாக்குதல்கள் தொடர்பில் பெருமளவில் தகவல்கள் வெளியிடப்பட்டதை காண முடிந்தது.

அந்த வகையில் இனிமேல் சிறுவர்களுக்கு எந்த விதத்திலும் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் தண்டனைகள் வழங்குவதை தடுக்கும் வகையில், சட்டத்தில் சம்பந்தப்பட்ட சரத்துக்கள் திருத்தம் செய்யப்படவுள்ளன. உடல் ரீதியான தண்டனையை முடிவுக்கு கொண்டு வரும் சர்வதேச தினம் நேற்று முன்தினம் 30ஆம் திகதி சிறப்பிக்கப்பட்டது.

இதற்கு சமகாலத்தில் மேற்படி சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.இந்நிலையில் நாட்டின் அனைத்து சிறுவர்களுக்குமான உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

அந்த வகையில் சிறுவர்களுக்கு தேவையான சட்ட ரீதியான பாதுகாப்பு வழங்கப்படும் அதே வேளை,வயது வந்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரால் உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ எந்தவித தண்டனையையும் வழங்குவது சட்டப்படி குற்றமாகும்.அவ்வாறு செயற்படுபவர்கள் குற்றவாளிகளாக கருதப்படுபவர். இதுகுறித்து இந்த சட்ட திருத்தத்தில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்று தொழிலாளர் தினம்...

ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினப் பேரணி கம்பஹா பொது விளையாட்டரங்கிலும், ஐக்கிய சோசலிசக் கட்சி கிராண்ட்பாஸில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளன. முன்னணி சோசலிஸ்ட் கட்சியின் மே தின பேரணி கொழும்பு ஹைட் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. சுதந்திர கூட்டுத் தொழிற்சங்கம் கொழும்பு விஹார பூங்காவில் மே தினப் பேரணியை நடத்தவுள்ளது.

## ஐ.தே.க மற்றும் இ.தொ.காவின்...

பெரிய தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸாகும். இதன் பின்னர் இன்று (01) பிற்பகல் கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின், மே தினக் கூட்டத்திலும் ஜனாதிபதி இணைந்து கொள்ள உள்ளார்.

## நட்டமீட்டிய அரச நிறுவனங்கள்...

குறிப்பாக மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிவாரண அடிப்படையில் செயற்படும் நிறுவனங்கள், உற்பத்திக்கான செலவு முறையான கட்டண நிர்ணயம் போன்றவற்றை முன்னெடுத்துள்ளமையே இலாபமீட்டக் காரணமானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஏனைய அரச நிறுவனங்களை மிகவும் பலன் தரும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக, தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார். இதன் மூலம் அரசாங்கத்திற்கு அதன் அடிப்படை பொறுப்புக்களில் அதிக கவனம் செலுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் வரி வருமானத்தின் பலனை உறுதிப்படுத்தும் வகையில், இதன் மூலம் வாய்ப்பு கிடைப்பதாகவும் கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு போன்ற பிரிவுகள் தொடர்பில் கூடுதல் கவனத்தை செலுத்துவதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியாக ரணில் இருப்பதே...

நிதி எரிக்சொல்ஹெய்ம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பிலே அமைச்சர் டக்ளஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக இவர்கள் கலந்துரையாடினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வை பெற்றுத்தரக் கூடியவரா கவும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரபலமிக்கவ ராக உள்ளார்.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதே சிறந்தது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு எவ்வாறான தீர்வைக்கான முடியும் என்பதை தொடர்ந்தும் கூறிவருகிறோம்.

பிரபாகரனின் போக்கு தொடர்ந்தால் 2009ஆண்டு முடிவையே எதிர்கொள்ள நேரிடுமென, 28 ஆண்டுகளுக்கு முன்னரே, எரிக் சொல்ஹெய்மிடம் தாம், கூறியதையும் அமைச்சர் டக்ளஸ் நினைவூட்டினார்.

நோர்வே அரசின் உதவிகளை கடற்றொழிலாளர்களுக்கு பெற்றுத்தருமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில், நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் ஹிமன்சு குலட்டியும், கடற்றொழில் அமைச்சரின் ஆலோசகர் டொக்டர் எஸ். தவராசா மற்றும் அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் பாரூக் அஸீஸூம் கலந்து கொண்டனர்.

## மே தின கூட்டங்களில்...

ட்ரோன்களை பயன்படுத்துவதற்கு அவசியமானால் அதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துத தெரிவித்துள்ளார்.

இந்த சட்டம் நாடளாவிய ரீதியில் நடைபெறும் அனைத்து மே தின பேரணிகளுக்கும் பொருந்தும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மே தினக் கொண்டாட்டத்தில்...

விமான நிலையத்தை வந்தடைந்தனர். பாடகர் கிரிஷ், ரம்யா, டேனியல் ஜெயராம், ரேஷ்மா சுந்தரம் ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

## குற்றச்சாட்டுக்களிலிருந்து...

மஹிந்தானந்த அழுத்கமகே அமைச்சராக பதவி வகித்த காலத்தில் சட்டவிரோதமாக சம்பாதித்த சுமார் 27 மில்லியன் ரூபாவுக்கு, கொழும்பு கின்சி வீதியில் சொகுசு வீடொன்றை கொள்வனவு செய்தார் என பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராக சட்டமா அதிபர் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பையே நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரமான அரசி விநியோகத்துக்கு...

பதுளை மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசி மூடைகளையும் சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் விசாரணைகள் முடியும் வரை அரிசி விநியோகத்திற்காக பணம் வழங்குவதை நிறுத்துமாறு திறைசேரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் சமூக விவகாரங்களுக்கான ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

(01.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** செய்யும் வேலைகளில் கவனக் குறைவால் ஏற்பட்ட தவறுகளை சரி செய்ய நேரிடும். கூட்டு தொழில் செய்பவர்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.

**ரிஷபம்:** சொந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஆதாயம் அதிகரிக்கும். வேலையை முடிக்க வாடிக்கையாளர்களிடமிருந்து நெருக்கடி வரலாம்.

**மிதுனம்:** கூட்டுத்தொழில் முயற்சியில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். கூட்டாளிகளை அனுசரித்துச் செல்லுங்கள். பங்குச்சந்த வியாபாரத்தில் சிறிது முன்னேற்றம் காணக்கூடும்.

**கடகம்:** கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.

**சிம்மம்:** தொழில்நுட்பம் அறிந்தவர்களை உதவியாளர்களாக பணியில் அமர்த்தி கொள்ள திட்டமிடுவீர்கள். கூட்டுத்தொழில் செய்பவர்கள் பணியாளர்களை அவ்வப்போது கண்காணித்து வருவது நல்லது.

**கன்னி:** கூட்டுத் தொழில் சுமாராக நடைபெறும். ஆயினும் வழக்கமான லாபம் குறையாது. பங்குச்சந்து வியாபாரத்தில் லாபம் இல்லாமல் போகலாம்.

**துலாம்:** கூட்டாளிகளில் ஒருவர் பிரிந்து சென்று புதிய தொழிலை தனியாக செய்ய முற்படுவர். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். எதிர்பார் த லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** சொந்தத் தொழில் செய்பவர்கள் அவசர காரியங்களை முடிப்பதற்காக அதிக அலைச்சலை சந்திக்க வேண்டியது இருக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** கூட்டு தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் வந்து சேரும். பங்குச்சந்தை வியாபாரத்தில் இஸ்திர தன்மை உள்ள பங்குகளில் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்:** பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியாபார அபிவிருத்தி ஏற்படும். பங்குச்சந்தைகள் அதிக லாபம் பெற சிறிது காலம் பொறுமையாக இருப்பதே நல்லது.

**கும்பம்:** கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வங்கிகளில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கலாம். பங்குச்சந்தையில் ஸ்திரமான விலை உள்ள பங்குகளை பெற முயற்சிப்பீர்கள்.

**மீனம்:** தொழிலை விஸ்தரிப்பது பற்றி கூட்டாளிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பது நன்மை தரும். பங்கு சந்தை வியாபாரம் நன்கு நடைபெறும்.

## உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி...

அப்படி இருந்தால், அதை எப்படி தடுப்பது என்பது பற்றிய அனுபவம் உலகம் முழுவதும் உள்ளதென்றார்.

கடந்த காலங்களில் சிலரின் நாச வேலைகளால் நாடு இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களை இழந்தது. கடந்த 2015 ஆம் ஆண்டு நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது, ஆனால் நீதிமன்ற நடவடிக்கைகளால் அது இழக்கப்பட்டது.

மேலும், கெல்வரபிடிய LNG ஆலை மற்றும் பல்வேறு சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் போராட்டங்கள் மூலம் இழக்கப்பட்டன. இவ்வாறாக பொதுமக்களை அச்சுறுத்தும் மற்றும் தூண்டிவிடக்கூடிய செய்திகள் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டிற்கு இல்லாமல் போய்விட்டன. எனவே, உண்மை தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் இருந்து பெறுவது என்ற கொள்கை முடிவை எங்கள் அரசாங்கம் எட்டியுள்ளது. நீர், சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், 10 மெகாவோர்ட்டிற்கு குறைவான காற்றாலை அல்லது சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களை விரைவாகப் பெற மின்சார சபை மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இணைந்து புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தைப் பெற முடியாவிட்டால், எதிர்காலத்தில் இன்னொரு மின் நெருக்கடி உருவாகலாம்.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்களைப் பெற்று ஆலைகளை தொடங்காமல் காலதாமதம் செய்து, அந்த அனுமதிப் பத்திரங்களை அதிக தொகைக்கு ஏனைய தரப்பினர்களுக்கு விற்பனை செய்யும் மாபியாவையும் கண்காணித்து வருகின்றோம். எனவே, மின் உற்பத்தி நிலையங்களை விரைவுபடுத்துவதற்கான புதிய திட்டத்தை தற்போது தொடங்கியுள்ளோம். அதன்போது புள்ளி முறைமை மூலம் அனுமதி வழங்கி, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சரியான நேரத்தில் விரைவாக சேகரிக்கும் செயற்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

05 முதல் 500 மெகாவோர்ட் வரையிலான மேற்கூரை சோளார் பெனல் திட்டங்களால் கடந்த காலத்தில் மாதத்திற்கு சுமார் 22 மெகாவோர்ட்களை மட்டுமே பெற முடிந்தது.

ஆனால் இந்த நிலை குறித்து முறையான ஆய்வுகளைச் செய்த பிறகு மார்ச் மாதத்துக்குள் அந்த அளவை 40 மெகாவோர்ட்டாக உயர்த்த முடியும்" என்று மின் சக்தி மற்றும் வலு சக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## கெஹெலிய தாக்கல் .....

அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றம் நேற்று மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளது. இது தொடர்பான உத்தரவு மே 07ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிமன்ற நீதிபதி டி.என். சமரகோன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 84 ஆவது மேதின விழா

**கொட்டகலை பொதுவிளையாட்டு மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு விழா ஆரம்பம்**

**உதிரத்தை உழைப்பாக்கி உழைக்கும் உத்தமருக்கு இம்மேதினியில் மேன்மையுண்டாம்! உரிமைகளை வென்றெடுக்க உன்னத நாளில் அணிதிரள்வோம்!**



## பாட்டாளி வர்க்கத்தின் நம்பிக்கை இ.தொ.கா





உழைக்கும் மக்களின் உன்னதங்களைச் சொல்லும் தொழிலாளர் தினமான மே 1 ஆம் திகதி அனைத்து உழைக்கும் வர்க்கத்தினருக்கும் உரித்தான ஒரு நாள். உலகத்தின் உழைக்கும் வர்க்கத்தினருக்காக கொண்டாடப்படும் இந் நாளில் எம்மக்களின் அடிப்படை பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காண நாம் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார நெருக்கடிகளால் பல்வேறு இன்னல்களை தமது அன்றாட வாழ்க்கையில் எதிர்நோக்குகின்றனர்.

நாட்டின் ஏற்றுமதித்துறையில் கணிசமான பங்களிப்பை வழங்கிவரும் இவர்களின் அன்றாட வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அன்றிலிருந்து இன்றுவரை மக்களோடு மக்களாக இ.தொ.கா முன்னின்று போராடி, பல நாடுகளுடன் ஒப்பிடும்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெறமுடியாத உரிமைகளை இலங்கையில் பெற்றுக் கொடுத்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

இதுவரை இ.தொ.கா அவ்வப்போது மலையக மக்களுக்கான கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றி வந்துள்ளது. இவை அனைத்தும் இ.தொ.காவின் சாதனைகளாகும். அத்துடன் தோட்டத்தொழிலாளர்கள் காலம் காலமாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னின்று செயற்படுகின்றது.

இவர்களுடைய வாழ்க்கை மேலும் சுபீட்சமாக அமைய வேண்டுமென்பதே இ.தொ.காவின் அபிலாஷை.

அத்துடன் இலங்கையில் பழைமை வாய்ந்த தொழிற்சங்கமான இ.தொ.கா 83 ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக 84 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இன்னும் பல நூற்றாண்டுகளை கடந்து, கடந்த காலம்போல் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் நலன்கருதி மக்கள் பணி செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக!

தொழிலாளர் வர்க்க சிந்தனையோடும், உணர்வோடும் செயலாற்றியதன் விளைவாகவே பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றை வெற்றி கொண்டோம். 84 ஆண்டுகளாக எமக்கு கிடைத்த வெற்றிகளே அவையாகும்.

ஆகவே எமது தோட்டத் தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டு, அவர்கள் வாழ்வில் முன்னேற்றமடைய இன்றைய உழைக்கும் தொழிலாளர் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோமாக!

**தேவதாஸ் சவரிமுத்து...**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

## இ.தொ.காவின் சாதனைகளை நினைந்து இன்றைய நாளில் பெருமிதமடைகிறோம்

**இ.தொ.கா பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மேதினச் செய்தி**



மலையக வரலாற்றில் 84 மேதினங்களைக் கண்ட பெருமை தோட்டத்தொழிலாளர்களுக்கும் இ.தொ.காவுக்கும் உண்டு என்பதை ஒவ்வொருவருடமும்நிகழும் மேதின விழாக்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த வரலாற்று மேதினங்கள் தோட்டத்தொழிலாளர்களுக்கு விமோசனத்தையும், விடிவையும் ஏற்படுத்தித் தந்திருக்கின்றன என இ.தொ.கா பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் தமது மேதினச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை காலமும் இ.தொ.கா மலையக மக்களுக்கான கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றி வைத்துள்ளது. இந்த தொழிலாளர் தினத்தில் இதனை பெருமிதத்துடன் நினைவு கூருகின்றோம். பின்னோக்கிப் பார்க்கின்றோம். இன்று மலையக சமூகம் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றது. காலமாற்றத்திற்கேற்ப எமது தேவைகள் நாளுக்கு நாள் பெருகிவிட்டன. அதேவேளை புதுப்புது தேவைகளையும் முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

நெருக்கடியான காலகட்டத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கும் நாம் எமது அவசர அவசியத் தேவைகளையும், கோரிக்கைகளையும் மிகச் சாதுரியமாக பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்து வருகின்றோம். எவ்வாறாயினும் இந்த மாற்றங்களுக்கும், மாறுதல்களுக்கும் தீர்க்கதரிசனமாக பணிகளை முன்னெடுத்துச் செல்ல இந்த உன்னத நாளில் ஒன்றிணைவதன் மூலமாக உரிமைகளை வென்றெடுப்போமாக!

அனைவருக்கும் எமது மேதின வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

## தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்போம்!

**இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வாழ்த்து**



உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மேதினத்தை கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

"உலகின் பல்வேறு நாடுகளில், பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியை கொண்டாடும் முகமாக மேமாதம் 1ஆம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாக கொண்டாடுகிறோம். ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் தான். பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

காலனித்துவ ஆட்சிக்காலம் முதல் சுதந்திர இலங்கையிலும் கூட கடுமையான போராட்டங்கள் ஊடாகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததுள்ளனர். குடியுரிமையற்று இருந்த பெருந்தோட்ட தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் இ.தொ.கா போராட்டங்களை வரலாறு முழுவதும் நடத்தியுள்ளது.

மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் அடிப்படையாக கொண்டே அனைத்து சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர். அதே வழியில் இ.தொ.கா தொடர்ந்தும் பயணம் செய்யும். தொழிலாளர்களுக்காக எமது தொழிற்சங்க ரீதியான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

தொழிலாளர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கும் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்க வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கபபடுவதை உறுதி செய்யும் அதேவேளை, அவர்களின் வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்த இ.தொ.கா முன்னின்று செயற்படும் என்று செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## மலையக மக்களின் வாழ்வில் மாற்றத்தை உருவாக்குவோம்!

**இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்**



இலங்கைத் தேசத்தை தமது உழைப்பினால் உயரச் செய்துள்ள மலையகத்தின் உழைக்கும் வர்க்கத்தினரான இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் விடிவுக்கான முதலாவது படியாக இன்றைய மேதினம் அமைய வேண்டும் என்று தெரிவித்துள்ள பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார், மேதினத்துக்கு முன்பதாக பூரணத்துவ மலையகத்தை உருவாக்குவதற்கு உறுதி பூணுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேதினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது: தொழிலாளர் வர்க்கத்தினர் பூரணத்துவமான வாழ்க்கையை வாழவில்லை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். 200 வருட கால வரலாற்றைக் கொண்டுள்ள ஒரு சமூகப் பிரிவினர் நாட்கூலிகளாக நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் இத்தகைய நிலைமைக்கு இந்நாட்டின் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் அவ்வப்போதான தொழிற்சங்கங்களும் பதில் கூறியாக வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்து தரப்பினரும் தங்களது கடமைகளையும், பொறுப்புக்களையும் சரிவர செய்திருப்பார்களேயானால் மலையகம் நிச்சயமாக வெற்றிகரமான மாற்றத்தை கண்டிருக்கும்.

இன்றைய நிலையில் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் தொழிற்சங்கவாதிகளும் கம்பனி உரிமையாளர்களும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை நாட்கூலிகளாகவே வைத்திருக்க வேண்டும் என்ற தோரணையில் அவர்களின் நாட்கூலி பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர். மாறாக அவர்களுக்கான நிரந்தரமான வருவாய் பற்றியோ செப்பனிடப்பட்ட வாழ்க்கை நிலை பற்றியோ சிந்திக்கவில்லை. இத்தகைய நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்று மேடை போட்டு பேசும் அத்தனை அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் அடுத்து வருகின்ற மே தினத்துக்குள் மலையகத்தில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதி பூண வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டை ஒரு ஸ்திரமான நிலைக்கு இட்டுச் செல்கின்றார். அவரது முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்புகளையும் ஆதரவையும் வழங்குவோமானால் நிச்சயமாக மலையகம் கணிசமான அடைவு மட்டத்தை எட்டும் என்பதில் சந்தேகமே இல்லை. உழைக்கும் வர்க்கத்தினருக்காக தொடர்ந்தும் பயணிப்பதற்கு என்னாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவேன். அனைவருக்கும் சர்வதேச தொழிலாளர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சம்பள உயர்வை பெற்று கொடுக்க பாடுபடுவோம்!

**ராமேஸ்வரன் எம்.பி**



இன்றைய தினம் சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் எமது உறவுகளுக்கு தொழிலாளர் தின வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'அரும்பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, இந்த நாட்டின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும் தொழிலாளர்களின் மேன்மையை உலகறிய செய்த உழைக்கும் வர்க்கத்தினரை நினைவு கூருவதில் பெருமிதம் கொள்கின்றேன். தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகளைப் பாதுகாக்கவும், தொழிலாளர் விரோத போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்த தொழிலாளர் தினத்தில் உறுதி கொள்வதோடு பெரும் இழுபறியாக உள்ள பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பை உரிய முறையில் பெற்றுக் கொடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் இதற்கான உரிய தீர்வினை கூடிய விரைவில் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாம் அதனைப் பெற்றுக் கொடுப்போம்' என தனது தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியில் ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**தலவாக்கலை குறூப் நிருபர்**

## தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்

**இராதாகிருஷ்ணன் எம்.பி மேதின செய்தி**



மலையக தோட்டத் தொழிலாளர் சமூகம் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் கடந்திருக்கும் இவ்வேளையில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இம்முறை மேதினமானது மலையக தோட்டத் தொழிலாளர்களை பொறுத்தவரை குழப்பமானதாகவே உள்ளது என்று மலைய மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

'நாட்டில் ஏற்பட்ட கொரோனா பாதிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல இன்னல்களை அனுபவித்து வந்த வேள்யிலும் தோட்டத் தொழிலாளருக்கான சம்பள உயர்வு இன்னும் ஒரு எட்டாக்கனியாகவே இருந்து வருவது வேதனைக்குரியதாகும்.

மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் என்பது தொடர்ந்து போராடிய பெற வேண்டிய நிலையிலேயே உள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டு வந்து தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அவ்வாறானால் மட்டுமே தொழிலாளர்களின் உரிமை பாதுகாக்கப்பட்டதாக அமையும். அவர்கள் மே தினத்தை விமரிசையாக கொண்டாடுவதும் பொருத்தம் பொருத்தமானதாக இருக்கும். மக்களுக்கான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும் அவை வெற்றி அளிக்காதது வேதனைக் குரியதாகும். எதிர்வரும் காலங்களில் இந்த பேச்சுவார்த்தைகள் முறையாக நடைபெற்று மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேறுவதாக அமைய வேண்டும். முதலாளிமார் சம்மேளத்துடன் இணைந்து செயல்படும் தொழிற்சங்கங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு எங்களது புரண ஒத்துழைப்பு கிடைக்கும்' என அவர் தனது மேதின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிலாளர் சம்பள உயர்வில் மகிழ்ச்சியான தகவலொன்று கிடைக்குமென நம்புகிறேன்

**வடிவேல் சுரேஷ் எம்.பி**




'பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பிலான மகிழ்ச்சியான தகவல் ஒன்றை ஜனாதிபதி தெரிவிப்பார் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது' என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மலையகப் பிராந்திய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் நாயகமான வடிவேல் சுரேஷ் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'இன்றைய மேதின நிகழ்வு சங்கத்தின் தலைமை அலுவலகமான தொழிலாளர் இல்லத்தில் நடைபெறுகின்றது. தலைநகரில் இருக்கும் மலையக இளைஞர், யுவதிகளின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எதிர்கால மேம்பாட்டுக்காகவும் இம்முறை மலையக மக்களின் உரிமைக் குரல் தலைநகரில் ஒலிக்கின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களது சம்பள உயர்வை இலவு காத்த கிளி போல் காத்துக் கொண்டிருக்கின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பிலான மகிழ்ச்சியான தகவல் ஒன்றினை ஜனாதிபதி தெரிவிப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்று ரீதியிலும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் மலையக மக்களின் காணி உரிமை, வீட்டு உரிமை, தொழில் பாதுகாப்பு போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்க பாடுபடுவேன்.' இவ்வாறு வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார்.

# கிழக்கின் குரல்



# 1,153 அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு

## மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதி



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள 1,153 அபிவிருத்தித் திட்டங்களுக்கு அம்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்த வருடத்துக்கான மூன்றாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், அம்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (29) நடைபெற்றது. இதன்போது கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்ட நிதியிலிருந்து 1,104.5 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 1,153 அபிவிருத்தித் திட்டங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார நிலைமை, கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் விவகாரங்கள் உட்பட அனைத்து திணைக்களங்கள்சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன், இவற்றில் பிரதேச மட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் பொதுமக்கள் சார்பாக பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், இவற்றில் மாவட்ட மட்டத்தில் தீர்க்க வேண்டிய விடயங்களுக்கான தீர்வுகளும் எட்டப்பட்டன.

தேசிய மட்டத்தில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், எஸ்.வியாழேந்திரன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, கோ.கருணாகரம், இரா சாணக்கியன், அலிசாஹிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் உட்பட மாவட்டச் செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் சகல திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சிக்கு தொழிலாளர் பங்களிப்பு மகத்தானது

## எம்.எஸ்.தௌபீக் எம்.பி.

கந்தளாய் தினகரன் நிருபர்



நாட்டின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் பங்களிப்பு மகத்தானது. இந்நாளில் எனது இதயம் கனிந்த மே தின வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவிப்பதாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

இன்று புதன்கிழமை மே தினமாகும். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உடலினை இயந்திரமாக்கி, உழைப்பினை உரமாக்கி, உலகத்தை இயங்க வைப்பவர்களே தொழிலாள பெருமக்கள். அவர்கள் வருடத்தில் ஒருநாள் மட்டுமே நினைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள் அல்ல. வருடம் முழுவதும் நினைத்துப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எமது நாட்டில் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலையை எதிர்நோக்கியுள்ளனர். தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியிருக்கிறோம். தொழிலாளர் நலனுக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் குரல் கொடுக்கும். தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றமும் நிம்மதியும் காண அயராது பாடுபடும் இயக்கமென்பதை உழைப்பாளர் சமுதாயம் நன்கறியும்.

உழைப்பாளர்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் அவர்களது குடும்பங்களில் மகிழ்ச்சி பொங்கவும் வெற்றி பெருகவும் பிரார்த்திக்கிறோம்" எனத் தெரிவித்தார்.

# வெள்ளைமணல் பிரதேசத்தில் புதிய ஆரம்பப்பிரிவு பாடசாலை



கிண்ணியா மத்திய நிருபர்

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட வெள்ளைமணல் பிரதேசத்தில் புதிய ஆரம்பப்பிரிவு பாடசாலையொன்று நேற்று செவ்வாய்க்கிழமை (30) தொடங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.ஏ.அதாஉல்லா, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க, திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ரவி ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க உரையாற்றிய போது, கிழக்கு மாகாணத்தில் 1,125ஆவது பாடசாலையாக இப்பாடசாலை உள்ளதென்றார்.

வெள்ளைமணல் பிரதேசத்தில் ஓர் ஆரம்பப் பாடசாலை உருவாக்கப்பட வேண்டுமென்று அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் அதாஉல்லா எம்.பி. விடுத்த கோரிக்கை ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. இதற்கமைய இப்பிரதேசத்தில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் 4,000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதுடன், கல்வி அதிகாரிகளுக்கும் பற்றாக்குறை உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# மே தினம்; கல்முனை பொதுச்சந்தை பூட்டு

சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட நிருபர்கள்

மே தினமான இன்று புதன்கிழமை (01) கல்முனை மாநகர பொதுச் சந்தையை முழுமையாக மூடுவதாக, அப்பொதுச் சந்தை வர்த்தக சங்கச் செயலாளர் ஏ.எல். கபீர் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் தொழிலாளர்களுக்கு விடுமுறை நாளாக இன்றையதினம் உள்ள நிலையிலேயே கல்முனை மாநகர பொதுச் சந்தையை மூடுவதாகவும், அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தின் முக்கிய பொருளாதார மையமாகத் திகழ்கின்ற கல்முனை மாநகர பொதுச் சந்தையின் வரலாற்றில் தொழிலாளர் சுதந்திரத்தை முன்னிலைப்படுத்தி இச்சந்தையை முழுமையாக மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவது இது முதல் தடவையாகுமெனவும், அவர் தெரிவித்தார்.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு மூவர் பரிந்துரை

ஒலுவில் விசேட நிருபர்

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரது பெயர்கள் பல்கலைக்கழக பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக, அப்பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.எம்.நௌபர் தெரிவித்தார்.

உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விசேட பேரவைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (29) பேராசிரியர் கொலின் என்.பீரிஸ் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கோரப்பட்ட அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் மூவரை பரிந்துரை செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம்.றஸ்மி, மூன்றாவதாக பேராசிரியர் எப்.ஹன்ஸியா றவூப் ஆகியோர் அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 09ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையால் விண்ணப்பம் கோரப்பட்டது. இதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர்களான எப்.ஹன்ஸியா றவூப், ஏ.எம். றஸ்மி, எஸ்.எம். ஜுனைடீன், எம்.வி.எம்.இஸ்மாயில், ஏ.எம். முஸாதிக், கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உட்பட ஏழு பேர் விண்ணப்பித்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 05ஆவது உபவேந்தராக கடந்த 2021.08.09ஆம் திகதி பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது பரிந்துரை செய்யப்பட்டுள்ள இம்மூவரில் ஒருவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06ஆவது உபவேந்தராக நியமிப்பார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில்

# ஐஸ் போதைப்பொருளுடன் இரு சந்தேகநபர்கள் கைது

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பின் காத்தான்குடி பிரதேசத்தில் 14 ஆயிரத்து 570 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரு சந்தேக நபர்களை மட்டக்களப்பு குற்ற விசாரணை பிரிவினர் நேற்று செவ்வாய்க்கிழமை (30) அதிகாலை 5.00 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நடத்திய சோதனையின் போது இச்சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளொன்றின் கீழ்ப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டு, இப்போதைப்பொருள் கொண்டு செல்லப்பட்ட போதே, இச்சந்தேக நபர்கள் பிடிபட்டதாகவும், இவர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

காத்தான்குடியைச் சேர்ந்த நபர்களையே இவ்வாறு கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களிடம் காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி

தம்பலகாமம் குறூப், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்கள்

திருகோணமலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக நீரிறைக்கும் இயந்திரக் குழாய்கள் மற்றும் விசிறல் நீர்ப்பாசனக் கருவிகளை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (29) வழங்கி வைத்தது.

இந்தக் குடும்பங்கள் தத்தமது வாழ்வாதாரத்துக்கான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வதற்காக இந்த உதவி வழங்கப்பட்டது.

இதன்போது நான்கு குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இம்மாதத்தில் இரண்டாவது முறையாக இந்த உதவி வழங்கப்பட்டதுடன், இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் வழங்கி வைத்தார்.

# கண்டலடிஊற்று கரையோர பகுதியில் கண்டல் தாவரம் நடுகை

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலையின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கண்டலடிஊற்று கரையோரப் பகுதியில் கண்டல் தாவரம் நடும் திட்டம் அல்றவ்ழா இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடலரிப்பை கட்டுப்படுத்தி கரையோரத்தை பேணிப் பாதுகாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கண்டல் தாவர நடுகை திட்டமானது, கண்டலடிஊற்று அல்றவ்ழா பாடசாலைக்கு முன்பாகவுள்ள கரையோரப் பகுதியில் கடந்த 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைக்கு அரச சார்பற்ற நிறுவனமான பெரண்டினா மற்றும் HSBC வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலளார் எம்.எச்.எம்.கனி, கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.அனீஸ், இளைஞர் சேவை அதிகாரி ஏ.டபிள்யூ.எம்.ஜிப்ரி, கிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் என்.நுஸ்ரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தொழுநோய்;

# காரைதீவு பிரதேசத்தில் கள ஆய்வு

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறையின் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழுள்ள வெட்டுவாய்க்கால் பிரதேசத்தில் தொழுநோய் தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை கள ஆய்வு நடத்தப்பட்டது.

காரைதீவு சுகாதார உணவு அதிகாரி தஸ்லிமா பஷீர் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் மேற்படி பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கு சென்று கள ஆய்வு நடத்தினர்.

இந்த கள ஆய்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தொழுநோய் கட்டுப்பாட்டு கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது அடையாளம் காணப்பட்ட நான்கு தொழுநோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

# கிண்ணியாவில் நான்கு கலைஞர்களுக்கு உதவி

கிண்ணியா தினகரன் நிருபர்



கிண்ணியா பிரதேச கலைஞர்கள் நால்வருக்கு உதவித் தொகை கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை (29) வழங்கி வைக்கப்பட்டது.

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவி அவசியமான கலைஞர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் அத்திணைக்களத்தால் இக்கலைஞர்கள் நால்வரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வருடா வருடம் கலைஞர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுவதுடன், இந்த வருடம் மேற்படி கலைஞர்கள் நால்வருக்கு தலா 10,000 ரூபாபடி இந்த உதவித் தொகையை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி வழங்கி வைத்தார். கவிஞர் அ.கௌரிதாஸன், கவிஞர் ஹஷன், ஓவியர் இஸ்மாயில், இசைக் கலைஞர் முகமட் ஆகியோரே இந்த உதவித் தொகையை பெற்றுக்கொண்டனர்.

# அம்பாறையில் வெள்ளை அரிசி இன நெல் விதைப்பில் விவசாயிகள் ஆர்வம்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

தற்போது அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் விதைப்புப் பணி மிகவும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இம்முறை வெள்ளை அரிசி நெல்லினத்தை விதைப்புச் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடும் உஷ்ணமான காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் வெள்ளை அரிசி நெல்லினம் உள்ளதாகவும் ஆகையால் அதையே விதைப்பதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை வெள்ளை அரிசி நெல்லினத்தை விதைப்புச் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால், அம்பாறை மாவட்டத்தில் வெள்ளை அரிசி விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# உழைப்பவர் உரிமைகள் வெல்ல, தமிழர் தேசம் தலைநிமிர உறுதி கொள்வோம்!

## அமைச்சர் டக்ளஸ்!

உழைக்கும் மக்களின் உணர்வுகளை உலகிற்கு பிரகடனம் செய்யும் மே நாளில், தமிழர் தேசம் தலை நிமிர, சரியான திசைவழியில் அணிதிரள அனைவரும் உறுதிக் கொள்வோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகெங்கும் பரவிக் கிடந்த தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை தகர்க்க உரத்த நியாயங்களை வெல்ல, அனைத்து மக்களும் ஒன்றிணைந்து முயற்சித்தமைக்கான வெகுமதியே, இன்றைய மேதினமாகும். இந்த வரலாற்று படிப்பினை எமக்கும் முன்னுதாரணமாய் நிமிர்ந்து நிற்கின்றது. சரிநிகர் உரிமைகளை பெற்றவர்களாய் எமது மக்கள், எமது தாயகமெங்கும் உறுதியாக வாழ வேண்டுமாயின் பலமான பொருளாதாரம் அவசியம். இந்த புரிதலின் அடிப்படையிலேயே, எமது மக்களுக்கான பல்வேறு பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கும் முயற்சியில் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றோம். ஆனால், பிரச்சினைகளற்ற கௌரவமாக வாழும் சூழலை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வார்களாயின், தங்களுடைய வெற்று அரசியல் சூனியமாகிவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். எமது முயற்சிகளுக்கு சேறு பூசும் கனவோடு ஒன்று பட்டும் நிற்கின்றனர்.



அன்றாடப் பிரச்சினைகள், அபிவிருத்தி, அரசியல் தீர்வு போன்றவற்றை நிவர்த்தி செய்யும் எதிர்பார்ப்புக்களை மனதில் சுமந்திருக்கும் எமது மக்கள், மதிநுட்ப சிந்தனைகளை ஏற்று நடைமுறை சாத்திய வழிமுறையில் திரண்டெழ வேண்டும்.

தாயக தேசமெங்கும் தமது எதிர்பார்ப்புக்களை நிலைநிறுத்த எமது மக்கள் இனிவரும் காலங்களை தம் கைகளில் எடுப்பர் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# வடக்கின் உதயம்

## யாழில் 7 ஆயிரம் அரச காணி துண்டுகள் பகிர்ந்தளிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் 7 ஆயிரம் அரச காணித்துண்டுகள், காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக மாகாண காணி ஆணையாளர் அம்பலவாணர் சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 05 வீதத்திற்கும் உட்பட்டதாகவே அரச காணிகள் காணப்படுகின்றன. சாவகச்சேரி, மருதங்கேணி, கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அரச காணிகள் உள்ளன.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் காணிகள் விஸ்தீரணம் கொண்டதாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அரச காணிகளை வழங்க தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், முதலீட்டுக்கு ஏற்ற காணிகளை பிரதேச செயலகங்கள் ஊடாக இனம் கண்டு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூர் உற்பத்திகள் மீளவும் அதிகரிக்கப்பட வேண்டும்

### அங்கஜன் இராமநாதன் எம்.பி

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*



நாடு பொருளாதாரத்தில் தன்னிறைவடையும் அதேவேளையில் தொழிலாளர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான அங்கஜன் இராமநாதன் தனது தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று தொட்டு இன்று வரை தொழிலாளர்களுடைய உழைப்பு முதலாளி வர்க்கத்தினால் சுரண்டப்பட்டு வருகின்றது.

தொழிலாளர்களுடைய உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் உள்ள போதிலும் போதிய விழிப்புணர்வு இன்மையால் இன்றும் தொழிலாளர்களுடைய உழைப்பும் உரிமையும் சுரண்டப்படுகின்றது.

எமது நாடு அண்மையில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தது. அதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க தொழிலாளர்களால் மட்டுமே முடியும்.

உள்ளூர் உற்பத்திகள் மீளவும் அதிகரிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் உள்ளூர் உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றது. உழைப்பால் உயர்ந்த எம் இனம் மீளவும் பொருளாதாரத்தில் தன்னிறைவு காண இந்த உழைப்பாளர் தினத்தில் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

அந்தவகையில் இன்று உழைப்பாளர் தினத்தை கொண்டாடும் சகல தொழிலாளர்களுக்கும் எனது தொழிலாளர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதில் மனமகிழ்வடைகிறேன் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

## பருத்தித்துறையில் ஈ.பி.டி.பியின் தொழிலாளர் தின நிகழ்வுகள்

*(கரவெட்டி தினகரன், பருத்தித்துறை நிருபர்கள்)*

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தின நிகழ்வுகள் பருத்தித்துறையில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளன.

இதுதொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவிக்கையில் எமது கட்சியின் இவ்வாண்டுக்கான தொழிலாளர் தின நிகழ்வுகள் பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேநேரம் எமது மேதின நிகழ்வுகளில் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள எமது கட்சியின் தலைமை அலுவலக முன்றலிலிருந்து வாகனப் பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேரணியானது யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதி வழியாக சென்று பருத்தித்துறை நகரை அடையவுள்ளது. குறிப்பாக தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி சிறப்புரை வழங்கவுள்ளனர்.

## திருநெல்வேலியில் மூன்று உணவகங்களுக்கு சீல்

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த மூன்று உணவகங்கள் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது.


பொது சுகாதார பரிசோதகரின் திடீர் பரிசோதனையின் போது, திருநெல்வேலி பகுதியில் மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து இதுதொடர்பில் சுகாதார பரிசோதகரால் உணவக உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டு, குறைகளை சீர் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டது.

## மன்னாரில் தர்பூசணி, நுங்கு விற்பனை அமோகம்

*(மன்னார் குறூப் நிருபர்)*

நாட்டில நிலவிவரும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர். இந்நிலையில் வெப்பத்தை தணிப்பதற்கு மன்னார் மாவட்டத்தில் தர்பூசணி மற்றும் நுங்கு கொள்வனவுகளில் பொதுமக்கள் அதிகம் ஈடுபடுவதை காணக்கூடியதாகவுள்ளது



உள்ளூர் சந்தைகளில் தர்பூசணிகளின் விலை சடுதியாக குறைந்துவருகின்றது. அதே நேரம் நுங்கு சர்பத் போன்ற இயற்கையான பானங்களையும் பருகிவருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

## யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்தவரை காணவில்லை

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளியொருவர் காணாமல் போயுள்ளார்.

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் வைத்தியசாலையிலிருந்து நேற்று முன்தினம் அவர் காணாமல் போயுள்ளார். எனினும் அவர் வைத்தியசாலையிலிருந்து இரவு வரையில் வீடு திரும்பவில்லையெனவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்

## நல்லதண்ணி பகுதியில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

*(மஸ்கெலியா தினகரன் நிருபர்)*

நல்லதண்ணி பகுதியில் குரங்குகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் சிவனொளிபாத மலைக்கு செல்லும் யாத்திரிகர்கள் பெரும் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். குரங்குகள் கூட்டம் கூட்டமாக வருவதால் சுற்றுலாப் பயணிகள், சிவனொளிபாதமலைக்கு தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் எனபலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அப்பகுதியிலிருந்த சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த பெண்ணொருவரையும் குரங்கு கடித்துள்ளதாக விடுதி உரிமையாளர் தெரிவித்தார். இந்நாட்களில் நல்லதண்ணி நகரில் அதிகளவில் குரங்கு கூட்டம் அலை மோதுவதை காண முடிகிறது.

குரங்குகள் விடுதிகள், கடைகள், வீடுகளில் புகுந்து உணவை எடுத்துக்கொண்டு ஓடுவதாகவும் விடுதி உரிமையாளர்கள் தெரிவித்தனர்



வனஜீவராசிகள் திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விடுதி உரிமையாளர்கள் மற்றும் பிரதேச மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மண்சரிவு அபாயம்

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

பலாங்கொடை வெலிக்கபொல பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் சில மணித்தியாலங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. அப்பிரதேசத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெலிக்கபொல பிரதேச செயலகப்பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக சில வீதிகள் நீரால் சூழப்பட்டதுடன் போக்குவரத்து நடவடிக்கைகளும் தடைப்பட்டிருந்தன.

அதன்பின்னர் போக்குவரத்து தடை நீக்கப்பட்டு ஒருபக்க வீதி போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது. வெலிக்கபொல, யட்டிபஸ்கமுவ, வெலிகபொல, ஹடங்கல வீதிகளில் சில இடங்களில் மண்சரிவுடன் மரங்கள், கற்கள் வீதியில் வீழ்ந்துள்ளதால் அவை படிப்படியாக அகற்றப்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட இடர்முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மலையகத்தில் மே தின நிகழ்வுகள்

மலையக பிரதேசங்களிலும் இம்முறை மே தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மலையக பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் மற்றும் தொழிற்சங்கங்கள் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

அதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் மேதின நிகழ்வுகள் கொட்டக்கலை நகர மைதானத்தில் நடைபெறவுள்ளதாக இ.தொ.கா ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல தொழிளாளர் தேசிய சங்கத்தின் மேதின கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் தலைவர் திகாம்பரம் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. அதேநேரம் மேதின பேரணியும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்கவுள்ளதுடன் தொழிளாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவர் உதயகுமார் எம்.பி, செயலாளர் பிலிப் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


ஐக்கிய மக்கள் சக்தியின் மேதின நிகழ்வுகள் கொழும்பில் ,நுவரெலியாவிலும் நடைபெறவுள்ளன.

## மின்னல் தாக்கத்தால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலி

*மாத்தளை சுழற்சி நிருபர்*

இரத்தோட்டை வெல்காலயாய பிரதேசத்தில் வீடொன்றிலிருந்த சகோதரனும் சகோதரியும் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (29) மாலை பெய்த மழையுடன் மின்னல் தாக்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இரத்தோட்டை கந்த தங்கந்த வித்தியாலயத்தில் தரம் (8) இல் கல்வி கற்கும் 12 வயதான ஒசடி செவ்வந்தி குணரத்ன மற்றும் அவரது சகோதரரான 23 வயதான திலிப பிரபோத குணரத்ன ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



சடலங்கள் இரத்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இரத்தோட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தங்கந்த பிரதேசத்தில் அன்றையதினம் மாலை இடி மின்னல் தாக்கத்தினால் சில வீடுகளில் மின்மானிகள், மின் குமிழ்கள், தொலைக்காட்சிகள் மற்றும் ஏனைய உபகரணங்களும் சேதமடைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



*(லுணுகல நிருபர் )*

லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் பதுளை வெலிமடை வால்டிமார் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

பதுளை மாவட்டத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளும் பாடசாலைகளில் ஒன்றாக வெலிமடை வால்டிமார் தமிழ் வித்தியாலயம் விளங்குகின்றது. இதனால் அவர்களின் தேவைகளை கண்டறிந்து லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனம் பல்வேறு உதவிகளை செய்துவருகின்றது.

இந்நிகழ்வில் வால்டிமார் தமிழ் வித்தியாலயத்தின் 125 மாணவர்களுக்கு அத்தியாவசியமான பாடசாலைப் பைகள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. நேரடி பயனாளிகள் தவிர பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர், வலயக்கல்வி அலுவலக ஊழியர்கள் மற்றும் லைக்கா ஞானம் அறக்கட்டளை குழுவின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பாட்டியின் மாத்திரையை உட்கொண்ட மாணவி உயிரிழப்பு

தனது பாட்டியின் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு மயக்கமுற்ற 15வயது பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நுவரெலியா ஸ்கிராப் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

பாட்டி வீட்டில் இல்லாத நேரத்தில் பாட்டியின் மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சிறுமியின் தந்தை வேறொரு பெண்ணை திருமணம் செய்து நானுஓயா பிரதேசத்தில் தனியாக வாழ்ந்து வந்துள்ளார். நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் சிறுமியின் சடலம் (29) தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இறக்குவானை சன் சைய்ன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் சன் சைய்ன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் இறக்குவானை சுப்பர் லெவன் கிரிக்கெட் கழகம் வெற்றிப் பெற்றது. வெற்றிப் பெற்ற அணிக்கு இறக்குவானை சன் சைய்ன் விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் தொழிலதிபருமான செல்வராஜா வெற்றி கிண்ணம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

(படம் காவத்தை தினகரன் விசேட நிருபர்)

## ஹெரோயினுடன் பெண் கைது

*(அக்குறணை குறூப் நிருபர்)*

கண்டி கெடம்பே பகுதியில் விகாரைக்கு முன்பாக இருந்த பூக்கடையில் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூக்களுக்கு அடியில் மறைத்து வைத்து ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பெண்ணின் இரண்டு மகன்களும் ஹெரோயின் போதைப் பொருள்கடத்தல்சம்பவத்துக்காகவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கண்டி பிரதேசத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கமைய விசேட பொலிஸ் குழுவொன்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# ITC ரத்னதீப – பொறுப்புமிக்க ஆடம்பரத்தின் அற்புதமான சின்னம் கொழும்பில் பிரம்மாண்டமாகத் திறக்கப்பட்டது

ITC Limited நிறுவனத்தின் முழுமையான துணை நிறுவனமான WelcomHotels Lanka (Private) Limited நிறுவனத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ள ITC ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் தொகுதி இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை வளப்படுத்துவது என்ற உறுதிப்பாட்டுடன் கொழும்பில் விண்ணைத் தழுவும் மாணிக்கப் படிகமாக மிளிர்கின்றது.

ITC ஹோட்டல் குழுமத்தின் விருந்தோம்பலின் பிரதான சின்னமாக விளங்கும் ITC ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் தொகுதி, இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில், கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மேன்மை தங்கிய சந்தோஷ் ஜா மற்றும் ITC Ltd இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்ஜீவ் பூரி ஆகியோரின் பங்குபற்றலுடன் இன்றையதினம்



உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய மலரான நீல அல்லி மலரிடமிருந்து கிடைத்த அகத்தூண்டலுக்கு அமைய அதன் கலையம்சங்களை மீண்டும் நினைவூட்டும் வகையில் இந்த ஆடம்பரம் மிக்க இடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ITC ரத்னதீப அல்லது "இரத்தினங்களின் தீவு" விருத்தினர்களுக்காக 352 அறைகள், கூடத் தங்களை (Suite) மற்றும் தொடர்மாடி வீடுகள் (apartments) ஆகியவற்றைக் கொண்டமைந்திருப்பதுடன், ஒவ்வொரு அறைக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள பல்கணிகள் கடற்கரையின் அற்புதமான காட்சியை உங்கள் கண் முன்னால் கொண்டுவரும். இந்த ஆடம்பர ஹோட்டல் தொகுதியின் ஒரு பக்கம் இந்து சமுத்திரத்தின் கரையோரமும், மறுபக்கம் பேர வாவியும் அமைந்திருப்பதுடன், ITC ரத்னதீப ஹோட்டல் தொகுதி மற்றும் Sapphire Residences ஆடம்பர தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதி ஆகிய இரு நட்சத்திர கோபுரங்களும் சிறந்த விருந்தோம்பலை வழங்குகின்றன. 100 மீற்றர் உயரத்தில் இந்த இரண்டு கோபுரங்களையும் இணைக்கும் அதிநவீன தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அஹச' வான் பாலம் கட்டடக் கலையின் சிறப்பம்சத்தைப் பறைசாற்றுகின்றது.

ITC ரத்னதீப திறப்புவிழாவில் கருத்துத் தெரிவித்த ITC Limited நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான சஞ்ஜீவ் பூரி குறிப்பிடுகையில், உலகளாவிய அளவில் தரப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் நடைமுறைகளுடன், அமெரிக்க பசுமைக் கட்டட கவுன்சிலின் LEED Platinum சான்றளிப்புத் தரங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இத்திட்டத்தின் மூலம் கம்பனியின் நிலைபேறு தன்மைக்கு நற்சான்றிதழ் கிடைத்துள்ளது" என்றார்.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# "தலையால் சிந்தியுங்கள்" சந்தைப்படுத்தல் பிரசாரத்தை முன்னெடுக்கும் SHAKO

இலங்கையில் மோட்டார் சைக்கிள் தலைக்கவச பாதுகாப்பு தொடர்பில் முன்னணியில் உள்ள SHAKO தலைக்கவசம், பாதுகாப்பு, சௌகரியம், ஸ்டைல் ஆகிய 3 முக்கிய கூறுகளின் அடிப்படையில் புதிய தரத்தில் தயாரிக்கப்பட்ட, புதிய SHAKO தலைக்கவச வரிசையை சந்தைக்கு அறிமுகப்படுத்துகிறது. SHAKO இலங்கை மக்களை "தலையால் சிந்தியுங்கள்" எனும் சந்தைப்படுத்தல் பிரசாரத்தின் மூலம் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அறிவுறுத்துகிறது. மேலும், பாதுகாப்பான தலைக்கவசம் தொடர்பான அவர்களது தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ள SHAKO தலைக்கவசங்கள், அதற்கான விசேடத்துவம் மற்றும் அர்ப்பணிப்புடன் தலைக்கவசத் துறையில் முன்னணியில் திகழ்கிறது.

பெருமைக்குரிய Stafford குழுமத்தில் அங்கம் வகிக்கும் Inventive Polymers Lanka நிறுவனத்தால் மேற்




கொள்ளப்படும் பல்வேறு உள்ளக தர சோதனைகள் மூலம் SHAKO தலைக்கவசங்கள் தரத்தை மேலும் உறுதி செய்கின்றன. அத்துடன் SLS சான்றிதழுடன் வரும் ஒவ்வொரு SHAKO தலைக்கவசங்களும் புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படுகிறது.

# மனித சமூகத்துடன் ஆண்டின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளும் TikTok #Avurudu

இலங்கையின் கலாசார அடையாளத்தை வெளிப்படுத்தும் தனித்துவமான சிங்கள தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சி மற்றும் சிரிப்பு நிறைந்த மகிழ்ச்சியான நேரம் என்று விவரிக்கலாம். புதிய படைப்புகள் மற்றும் அனைவரின் ஒற்றுமை, பண்டிகைக்கால TikTok ரசிகர்களுக்கு ஒரு புதிய வேடிக்கையான ஒரு தருணமாக இருந்தது. குறிப்பாக, TikTok பல்வேறு பகுதிகளின் கலாசாரங்கள், பண்டிகைகள் மற்றும் அனைவரும் ஒன்றாகச் செய்யும் பிற செயல்பாடுகளைப் பற்றி உலகுக்குக் காண்பிக்க சரியான தளமாக இருந்தது.



TikTok இல் நவநாகரீக அடிப்படையில் பல்வேறு படைப்புகளை வழங்கும் Tiasha Fernando, இந்த புத்தாண்டு காலத்திற்கான பாரம்பரிய உடைகள் மற்றும் நவீன பாணிகளின் அற்புதமான கலவையை வழங்கினார். "நான் வருடத்தில் பாரம்பரிய ஆடைகளுக்கு முன்னுரிமை கொடுக்க முயற்சித்தேன்" என்று அவர் கூறினார். Tiasha Fernando அழகான ரவிக்கைகள் மற்றும் பொருத்தமான அழகான லுங்கிகள் மற்றும் மலர் அச்சிடப்பட்ட ஆடைகள் மூலம் கலாசார பெருமை மற்றும் அடையாளத்தை காட்ட உழைத்திருந்தார்.

மேலும் இதன் மூலம் அவர் பரிசளித்த Batik Sarongs, லுங்கிகள், கைத்தறி சட்டை, ரவிக்கை போன்ற ஆடைகள் காண்போரை கவர்ந்து வாழ்க்கைக்கு புத்துணர்ச்சியை சேர்த்தன.

# டோக்கியோ சீமெந்து வருடாந்த விநியோகஸ்தர் மாநாடு 2024 இல் சிறந்த செயற்பாட்டாளர்களுக்கு கௌரவிப்பு

டோக்கியோ சீமெந்து குழுமம் தனது வருடாந்த விநியோகஸ்தர் மாநாடு 2024 நிகழ்வை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. நாடு முழுவதையும் சேர்ந்த 140 க்கும் அதிகமான சிறப்பாக தமது பங்களிப்பை வெளிப்படுத்தியிருந்த விற்பனை பங்காளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



யாழ்ப்பாணம் சிற்றி ஹார்ட்வெயார் அன்ட் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு ஆஞ்சனேயர் சீமெந்து அன்ட் ஹார்ட்வெயார், குருநாகல் – நஷனல் டிரேடிங் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி – சண்முகம் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி – எமரல்ட் ஹார்ட்வெயார் மற்றும் கட்டுநேரிய – ஹன்சிக ட்ரான்ஸ்போர்ட் ஆகியன 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த விநியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தன.

டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சியின் நிறைவேற்று முகாமைத்துவ அணியினரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், குழும பிரதம செயற்பாட்டு அதிகாரி எம். தயானந்தன், ஆலோசனைப் பணிப்பாளர் கிறிஸ்டோபர் பெர்னான்டோ மற்றும் சந்தைப்படுத்தல் குழும பொது முகாமையாளர் தசந்த உடவத்த ஆகியோர் பங்கேற்றிருந்தனர். நாடு முழுவதையும் சேர்ந்த டோக்கியோ சீமெந்து விற்பனையாளர்கள் இந்நிகழ்வில் ஒன்றிணைக்கப்பட்டு, நினைவில் நிலைத்திருக்கும் கொண்டாட்டமாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சி முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், முழு விற்பனை வலையமைப்பின் அர்ப்பணிப்பான செயற்பாட்டையும் பாராட்டியிருந்தார். வியாபார செயற்பாடுகளின் வரலாற்றில் மிகவும் சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் விற்பனை பங்காளர்களின் ஒப்பற்ற ஆதரவுடன் வெற்றிகரமாக செயலாற்றுவதற்கு முடிந்ததாக குறிப்பிட்டார்.

# Amazon Campus கல்வி நிறுவனத்துக்கு மேலும் இரண்டு UK அங்கீகாரங்கள்



இலங்கையில் தரமான முறையில் பல பாடநெறிகளை வழங்குகின்ற UGC மற்றும் TVEC இல் பதியப்பட்ட நிறுவனமான Amazon College & Campus இற்கு இரண்டு UK அங்கீகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முதலாவது British computer society எனப்படும் UK Chartered Body. இது IT துறையில் கால் பதிக்க நினைக்கும் மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான பாடநெறியாகும். இரண்டாவது OTHM (UK ) எனப்படும் மிகவும் பிரபலமான சர்வதேச அங்கீகாரமான மற்றுமொரு அங்கீகாரமாகும்.

பல புலமைப்பரிசில்களும் வெகு விரைவில் வழங்கப்பட உள்ளன என்று Amazon உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. இல்ஹாம் மரிக்கார் அறிவித்தார்.

# இலங்கையில் சியெட்டின் 7ஆவது பிரீமியம் 'S-I-S' விற்பனை நிலையம் குருநாகலில் திறப்பு



இலங்கையின் முன்னணி நியூமேடிக் டயர் உற்பத்தியாளரான சியெட் களனி ஹோல்டிங்ஸ் ஆனது தனது புதிய எண்ணக்கருவில் உதித்த ஷொப் இன்ஷொப் (SIS) விற்பனை நிலையத்தை குருநாகலில் திறந்து வைத்தது.

இது இலங்கையில் திறக்கப்படவுள்ள ஏழாவது சியெட் SIS விற்பனை நிலையமாகும். இந்த புதிய விற்பனை நிலையமானது குருநாகலில், நீர்கொழும்பு வீதியில், இல. 288C யிலுள்ள ரோஹன எண்டர்பிரைசஸ் குருணாகல (பிரைவேட்) லிமிடெட் டில் அமைந்துள்ளது.

இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டயர் வர்த்தகநாமத்தின் மூன்று வருட விநியோக ஊடக விரிவாக்க மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, சியெட் ஷொப் இன் ஷொப் எண்ணக்கருவானது வர்த்தக நாமத்தினை முதற்தரமாக்குவதற்கு ஊக்கமளிப்பதுடன் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# இணையற்ற வாய்ப்புக்களை வழங்கும் Cinnamon Life Integrated Resort



4.5 மில்லியன் சதுரஅடியைக் கொண்ட தொகுதி, பிரமிக்க வைக்கும் 30 மாடி கோபுரத்துடன் கூடிய இலங்கையின் முன்னணி கலப்புத் திட்டமான சினமன்ட் லைஃப் தனது புதிய அலுவலக இடப்பரப்பின் ஊடாக வணிகங்கள் புதிய உயரத்தை அடைவதற்கான வாய்ப்பையும், அவற்றுக்குப் புதிய முகவரியையும் வழங்கவுள்ளது.

கொழும்பின் நிதி கேந்திரநிலையத்தின் மையப்பகுதியில் அதாவது கொழும்பு துறைமுக நகரத்துக்கும் பிரதான வீதிகளுக்கும் இடையில் அமைந்துள்ள சினமன்ட் லைஃப், கோப்ரேட் நிறுவனங்களுக்கு உயர்தர வாழ்க்கை முறையுடனான நவீன பணியிட வசதி, உணவு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், சினமன்ட் லைஃப் ஹோட்டல்கள், கடைத்தொகுதிகள் மற்றும் குடியிருப்புக்களுடனான இடையறாத தொடர்புகளின் ஊடாக வணிகம், பொழுதுபோக்கு ஆகியவை ஒன்றாகக் கலந்த அனுபவத்தை வழங்கும்.

இந்த வணிகக் கோபுரத்தில் 24 மாடிகள் அலுவலக இடப்பரப்புக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், ஐந்து மாடிகள் வாகனத் தரிப்பிடத்துக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளமும் 10,564 சதுரஅடியுடன் ஒப்பிடமுடியாத இடப்பரப்பைக் கொண்டமைந்திருப்பதுடன், பரந்துபட்ட வணிகங்களுக்கான தேவையை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும், அவற்றின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சிக்கு உகந்த சூழலையும் வழங்கக்கூடியதாக அமைந்துள்ளன. இந்தக் கோபுரத்தின் ஒவ்வொரு தளத்திலும் அடுத்த தலைமுறைக்கான அலுவலக இடப்பரப்புக்கள், அடுத்த தலைமுறைக்கான தொழில்துறைக்கு முன்னேற இருக்கும் நிறுவனங்களுக்கு உறுதியளிப்பவையாக அமைகின்றன.

# கட்டுமானம், மின்வலு மற்றும் வலுசக்தி கண்காட்சி 2024: ஜூலையில்

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2024 ஜூலை 5ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை கட்டுமானம், மின்வலு மற்றும் வலுசக்தி கண்காட்சி 2024 ஆனது இடம்பெறவுள்ளது.




கட்டுமானம், உள்நாட்டு உற்பத்திப்பொருட்கள், மின்சக்தி மற்றும் வலுசக்தி சம்பந்தப்பட்ட துறைகளில் இலங்கையின் முன்னிலைக் கண்காட்சியாக கட்டுமானம், மின்வலு மற்றும் வலுசக்திக் காட்சிக்கூடம் அமைகிறது. அதனது எட்டாவது தொடர்ச்சியான வருடத்துடன், இந்தக் காட்சிக்கூடமானது கைத்தொழில் பங்கீடுபாட்டாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் கண்காட்சியாளர்கள் அவர்களது உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிப்படுத்தி, பெறுமதிமிக்க தொடர்புகளை முன்னெடுத்து மற்றும் கைத்தொழில் புத்தாக்கத்திற்கு உந்துதலாக விரிவான தளத்தை ஏற்படுத்துகிறது.

காட்சிக்கூடமானது, கண்காட்சியாளர்களுக்கான புதிய வணிக வாய்ப்புகளைத் ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் அடைவை விரிவுபடுத்துவதற்கும், பயன்படுத்தப்படாத சந்தைகளைத் அணுகுவதற்குமான தளத்தை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. அதிகளவு எதிர்பார்க்கப்பட்ட இந்தக் கண்காட்சியானது மின்சக்தி, வலுசக்தி, கட்டுமானம், வீடமைப்பு, உட்புற அலங்காரம், கட்டிடம் மற்றும் பொருட்கள் உட்பட பல கைத்தொழில்களை ஒரே இடத்தில் இணைக்கும் பல நிகழ்வுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

கைத்தொழில் வாண்மையாளர்களுக்கு இணையற்ற வலையமைப்பு வாய்ப்புகளை வழங்கும் கட்டுமானம், மின்சக்தி மற்றும் வலுசக்தி கண்காட்சிக்கூடம் 2024 இல் 14,000 இற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் மற்றும் 180 இற்கு மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'Innovation Day 2023' ஐ வெற்றிகரமாக முன்னெடுத்தது SLT-MOBITEL

ஆக்கத்திறன் மற்றும் தூரநோக்குடைய சிந்தனை ஆகியவற்றை வெளிப்படுத்தி, SLTMOBITEL இனால் முதன் முறையாக 'Innovation Day 2023 நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஊழியர்கள் மற்றும் வளர்ந்து வரும் வெளியக தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. மருதானை, ட்ரேஸ் சிற்றியில் அமைந்துள்ள SLTMOBITEL R&D நிலையமான The Embryo இல் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.



ஆக்கத்திறன் மற்றும் சிறப்பு கலாசாரத்தை ஊக்குவிக்கும் வகையில், இந்த நிகழ்வினூடாக SLTMOBITEL R&D அணி, நிறுவனத்தின் உள்ளக தொழில்முயற்சியாளர்கள், தொழில்முயற்சியாண்மை ஸ்ரூடியோ ஊடாக மற்றும் வெளியக தொழில்முயற்சியாளர்கள் தொழில்முயற்சியாண்மை ஸ்ரூடியோ ஊடாக நவீன தீர்வுகள் வெளிப்படுத்தப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இறுதி நிகழ்வில் பங்கேற்றிருந்தவர்களுக்கு தமது புத்தாக்கங்களை காட்சிப்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருந்ததுடன், அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் SLTMOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் அவர்கள் உரையாற்றியிருந்ததுடன், ஊக்குவிப்பு உரைகளை வழங்கியிருந்தனர். பங்கேற்றிருந்தவர்களில் ஊழியர்கள், பங்காளர்கள், தொழில்நுட்ப ஆரம்பநிலை நிறுவனங்கள், தொழில்நுட்ப சமூகம் மற்றும் அழைக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் போன்றவர்கள் அடங்கியிருந்தனர்.

Innovation Day ஐ முன்னெடுத்திருந்ததனூடாக கண்டுபிடிப்புகள் அடிப்படையில் இயங்கும் டிஜிட்டல் சேவை வழங்குநர் எனும் தனது நிலையை SLTMOBITEL உறுதி செய்திருந்தது. வியாபாரங்களுக்கான புதிய தயாரிப்பு கொள்கைகளை இந்த நிகழ்வு வெற்றிகரமாக வெளிப்படுத்தியிருந்ததுடன், வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கி, மூலோபாய பங்காண்மைகளை கட்டியெழுப்பிக் கொள்ள உதவி, வெளியக பங்காளர்களுடன் வியாபார தொடர்புகளை ஏற்படுத்த மற்றும் இலங்கையில் எதிர்கால டிஜிட்டல் புத்தாக்கத்தை கட்டமைக்க பங்களிப்பு வழங்கியிருந்தது.




# இலங்கை தொழில் அமைச்சு தொழிலாளர்களுக்கு ஆற்றிய சேவை என்ன?

## ஆற்றப்படாத சேவைகள் யாவை?

மற்றுமொரு சர்வதேச தொழிலாளர் தினம் வந்துவிட்டது. சர்வதேச தொழிலாளர் தினம் என்பது உழைக்கும் ஆண் பெண் இருபாலரின் நினைவாக கொண்டாடப்படும் ஒரு விசேட நாளாகும். ரஷ்ய இலக்கியத்தில் வாழ்வாதாரத்திற்காக உழைக்கும் முகங்களை நினைவுபடுத்தும் நாள் மே தினமாகும். சர்வதேச தொழிலாளர் தினத்தில், வியர்வை, தூசி படிந்த மற்றும் அழுக்கான முகங்களைக் கொண்ட நபர்கள் தொழிலாளர்களாக தங்கள் கடமைகளை விடாமுயற்சியுடன் செய்கிறார்கள்.

தற்காலத்தில் முக்கிய தொழிற்சங்கங்கள், அரசியல் இயக்கங்கள் மற்றும் கட்சிகளால் நினைவுகூரப்படும் பாரம்பரிய மேதினப் பேரணிகளின் நாளையும் குறிக்கிறது. தொழிலாளி என்ற பதம் நீக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தனைக்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தொழிலாளிக்கு இதுவரை என்ன செய்தது? எவற்றை செய்யவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது.

### இலங்கையின் தொழிலாளர் சட்டம்

இலங்கையில் இதுவரை 38 சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இருப்பினும், தொழிலாளிக்கு 16 சட்டங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இந்த 16 சட்டங்கள் அமுலில் உள்ளதோடு, தொழிலாளர் இருப்பில் பெண்களின் உழைப்பின் பங்களிப்பை அங்கீகரிக்காத நாடாக இலங்கை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுளள்து . சுகாதாரம், விமான சேவைகள், ஹோட்டல்கள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொழில்களைத் தவிர, பாலினப் பாகுபாட்டை வலுவாக ஒப்புக்கொண்டு பெண்களின் உழைப்புப் பங்களிப்பை மதியம் மணி நேரம் வரையிலும் சில சமயங்களில் பிற்பகல் சேவைகள் வரையிலும் கட்டுப்படுத்தும் நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் மேற்குறிப்பிட்ட வேறுபாடுகளை இலங்கை அங்கீகரிக்க முடியாததன் காரணமாக இந்த தொழிலாளர் சட்டம் ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் பயன்படுத்த முடியாத சட்டமாக மாறியுள்ளது.

இது பல முரண்பாடுகள் மற்றும் தெளிவின்மைகளில் உள்ளது. ஒரு நாடாக இலங்கை எதிர்கொள்ளும் சவாலானது, இத்தகைய பல விடயங்களில் அதிகபட்ச வினைத்திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதே நோக்கமாகும்.

### தொழிலாளர் அடையாளம்

சமுதாயத்தில், தொழிலாளர்களை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இல்லாமல், பொதுவாக ஏழைகளாகவும், சோகமாகவும், கண்ணீர் சிந்திய கண்களுடனும், உடல் ரீதியாக துன்பப்படுபவர்களாகவும் சித்தரிக்கும் ஒரு கருத்தியல் உருவாகியுள்ளது. தொழிலாளர்கள் என்று குறிப்பிடும் போது அவர்கள் தொழிலாளிகள் என்று கருதப்படுவது இலங்கையில் பலருக்கு தெரியாது. ஒவ்வொரு நாளும், சில நேரங்களில் நாள் முழுவதும் அல்லது வாரத்தின் ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கில் வேலை செய்பவர் ஒரு தொழிலாளியாகக் கருதப்படுகிறார் என்பது பலருக்குத் தெரியாது. அப்படிப்பட்டவர் ஒரு தொழிலாளியாக எத்தனை மணிநேரம், நாட்கள் சம்பளம் வாங்குகிறார் என்பது சில சட்டம் ஒழுங்குகளால் நிர்வகிக்கப்படுகிறது என்பது தெரியாது. இந்த தொழிலாளர் தினத்திலும், பலர் தொழிலாளர்களாகக் கருதப்படும் மற்றவர்களுடன் அனுதாபம் காட்டவும், அவர்களை அப்படிக் குறிப்பிடவும், அவர்களுக்கு பிரத்தியேகமாக நல்வாழ்த்துக்களை வழங்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இருப்பினும், இந்த பெரும்பான்மையினருக்கு தொழிலாளர்களை திறம்பட விரிவுபடுத்துவதன் முக்கியத்துவம் தெரியாது.

### தொழிலாளர் வகைப்பாடு

10 ஆண்டுகளில் இலங்கை தொழிலாளர்களின் நோக்கம் கிட்டத்தட்ட பத்து மடங்கு மாறிவிட்டது. பல நாடுகள் வேலைவாய்ப்பு அமைச்சு அல்லது மனித வள அமைச்சு என்ற சொற்களைப் பயன்படுத்துகையில், இலங்கை தொழில் அமைச்சு என்ற வார்த்தையை தொடர்ந்து பயன்படுத்துகிறது. பல நாடுகள் தொழிலாளர் தொழில்களை அவற்றின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்க வெள்ளை நிறம் அல்லது நீல நிறம் என வகைப்படுத்துகின்றன. இருப்பினும், இந்த நாடுகளில், இடைநிலை திறன் கொண்ட தொழிலாளர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களாக அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆயினும்கூட, அத்தகைய நாடுகளில் சட்டபூர்வ வழிமுறைகள் மூலம் தொழிலாளர் அடையாளத்தை எளிதில் அடையலாம்.

### தொழிலாளர் பாதுகாப்பு

தொழிலாளர் பாதுகாப்பு வேலைப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்காது. அதனால்தான் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது, இது அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்டு தேவையான செயல்முறைகளை நிறைவேற்றுகிறது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த முயற்சியை ஆரம்பித்தவர். தொழில் பாதுகாப்பை உறுதி செய்வது அரசாங்கத்தால் இயலாது. கொவிட்-19 தாக்கியபோது, வேலை இழப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது, மேலும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் போராடியது. மாறிவரும் சூழலுக்கு ஏற்ற தொழில் பற்றிய நுண்ணறிவு அரசாங்கத்திற்கு இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும். மக்களின் தொழில்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மைக் கடமைகளில் ஒன்றாகும். இது நாட்டில் தொழில் வாய்ப்புகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி பராமரிப்பதை உள்ளடக்குகிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரநிலைகளின்படி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தனது புதிய சட்டத்தின் மூலம், தொழில் தொடர்பான பிரச்சினைகளால் தொழிலை இழக்கும் நபர்களுக்கு மாற்று தொழில் கிடைக்கும் வரை அவர்களுக்கு ஆதரவை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### குறைந்த தொழில் வாய்ப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான சட்டங்கள்.

இலங்கையின் தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பு நாடு முழுவதும் 35 வீதமாக உள்ளது. நாட்டின் தொழிலாளர் சட்டங்களின்படி, ஹோட்டல், விமானம் மற்றும் சுகாதாரத் துறைகள் தவிர, பெண்கள் பொதுவாக இரவு நேர ஷிப்டுகளில் வேலை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. பெண்கள் தனியாகப் பயணம் செய்வதற்கு பாதுகாப்பான நாடுகளில் ஒன்றாக இலங்கை கருதப்பட்டாலும், பெண்கள் இரவுப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை. இந்த ஏற்றத்தாழ்வு நாட்டின் பணியாளர்களுக்கு அவர்களின் பங்களிப்பை பெரிதும் தடுக்கிறது. பெண்களுக்கு குறைந்த அளவிலான வேலை வாய்ப்புகள் உள்ளன, முக்கியமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களில் எட்டு மணி நேரம் வேலை செய்ய முடியும். மாறாக, அவர்கள் பெரும்பாலும் குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, வீட்டு நிர்வாகம் மற்றும் பாரம்பரியமாக பெண்களுக்கு ஒதுக்கப்படும் பிற வீட்டுக் கடமைகள் போன்ற பொறுப்புகளால் சுமக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக, பெண்கள் தங்கள் தொழிலாளர் பங்கைக் குறைத்துள்ளனர்












# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பலம் சேர்த்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மே தின வாழ்த்துகள்

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திய பெருமைக்கு உரித்தானவர்கள் புலம்பெயர் தொழிலாளர்கள் என்பது தற்போது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒன்றாகும். அதனை அவர்கள் வாய்ப்பேச்சாகவன்றி தமது செயற்பாட்டிலும் நிரூபித்திருக்கிறார்கள். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சூழலும் கடந்த பல ஆண்டுகளாக திறமைகளுக்காக கிடைத்த வேலைகள் காரணமாகவும் இலங்கையர்கள் பலரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்ல ஆர்வம் காட்டியதோடு 2021ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்கள் வரை வருடாந்தம் முறையே 122,887, 311,056 மற்றும் 297,673 இலங்கையர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு சென்றுள்ளனர். இதன் காரணமாக இலங்கை தொழிலாளர்கள் இந்நாட்டுக்கு அனுப்பிய அந்நிய செலாவணி நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க இடத்தை பெற்றுள்ளது.

கொவிட் 19 உலகளாவிய பெருந்தொற்று நிலைமைக்கு முன்னர் மாதாந்தம் தொழிலாளர்கள் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய 500 மற்றும் 700 மில்லியனுக்கு இடையிலான அமெரிக்க டொலர் இந்நாட்டு பொருளாதரத்திற்கு கிடைத்தபோதும் உலகளாவிய பெருந்தொற்று நிலைமைக்கு பின்னர் 2024 மற்றும் 2022 ஆண்டுகளில் கிடைத்த முழு வெளிநாட்டு தொழிலாளர் அனுப்பிய அந்நியச் செலாவணி அளவு 5,491.4 மற்றும் 3,789.4 மில்லியன் அமெரிக்க டொலர் அளவு குறைந்தது. நாட்டில் இருந்த பொருளாதார நெருக்கடி இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. ஆனால் 2023 ஒக்டோபர் ஆகும்போது இந்நாட்டுக்கு கிடைத்த புலம்பெயர் தொழிலாளர் அனுப்பிய பணததின் அளவு 5,969.6 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதாவது 5.96 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்தது. அது அதற்கு முந்தைய ஆண்டான 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 69 வீத அதிகரிப்பாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரமான வெளிநாட்டு தொழிலாளர் அனுப்பிய பணம் 967 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என எதிர்ப்புடையதாக உள்ளது. அமைச்சர் மனுஷ நாணயக்கா அவர்கள் அமைச்சைப் பொறுப்போற்ற தினம் தொடக்கம் இதுவரை அனுப்பி இருக்கும் பணம் 10.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு இணைந்து வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தின் மேம்பாட்டுக்கு எடுத்த சாதகமான செயற்பாடுகள் காரணமாக அந்த அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக அவதானிக்கப் பட்டுள்ளது. அவை பின்வருமாறு.

01. வெளிநாட்டு வேலையில் ஈடுபட்டிருக்கும் இலங்கையர்களால் ஈட்டப்படும் பணம் சட்டபூர்வமான வழிகளில் இலங்கைக்கு அனுப்பப்படுவதை ஊக்குவிப்பதற்கும் முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் உரிமம் மற்றும் மேலதிக வரிச் சலுகை வழங்கும் திட்டம் ஒன்றை செயற்படுத்தல்.

02. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலையில் ஈடுபடும் தொழிலாளர் ஒருவர் 60 வயதை பூர்த்தி செய்த பின் மாதாந்த ஓய்வூதியம் ஒன்றை பெற்றக்கொள்வதற்கு மனுசவி பங்களிப்பு ஊதியத் திட்டம் ஒன்று இலங்கை சமூக பாதுகாப்புச் சபையுடன் இணைந்து செயற்படுத்தல்.

03. வெளிநாட்டு வேலை ஒன்றுக்கு புறப்பட்டுச் செல்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவை பெறுகின்ற நபர்களின் வெளிநாட்டு வேலையில் ஈட்டுகின்ற பணத்தை சட்டபூர்வமான வழியில் இலங்கைக்கு அனுப்புவதாக உறுதி ஒன்றை பெறுவது.

04. சுய தொழில், சிறிய அல்லது நடுத்தர அளவான வேலைகளுக்கு நூற்றுக்கு 08 அளவான மிகவும் குறைந்த வட்டிக்கு 02 மில்லியன் ரூபா வரை கடன் வசதிகளை பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றப்பட்ட நிலையில் அரச மற்றும் தனியார் வங்கிகளின் உதவியை பெற்றுக்கொடுத்தல்.

05. 100 இலட்சம் வரை கடன் வசதியை பெற்றுக்கொடுத்தல்

06. தாம் வெளிநாட்டு தொழில் மூலம் ஈட்டுகின்ற பணத்தை சட்டபூர்வமான வழியில் இலங்கைக்கு அனுப்புவதற்கு, வெளிநாட்டில் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு பரந்த அளவில் பிரசார பொறிமுறை ஒன்றை வெளிநாடு மற்றும் உள்நாட்டில் செயற்படுத்தல்.

இந்த அனைத்துடனும் வெளிநாட்டு வேலைக்காக செல்கின்ற ஒவ்வொருவரும் பயிற்சி தொழிலாளராக வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக, பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சி தகைமை சான்றிதழை (NVQ) வழங்கல், மொழிப் பயிற்சி, மென் மற்றும் வாழ்க்கைத் திறன்களை பெற்றுக்கொடுத்தலுக்கு நாடு தழுவிய ரீதியில் கற்கைகளை நடத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தனியார் துறையுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்புடையவர்களுக்கு கிடைக்கும் பயிற்சிகள் தொடர்பில் தரவுகள்/விபரங்கள் பின்வருமாறு அமையும். பயிற்சி நிகழ்ச்சிகளில் சில நிகழ்ச்சிகள் தமிழ் மொழியில் நடத்தப்படுவதோடு அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, பதுளை, இரத்தினபுரி மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பயிற்சி நிலையங்களில் அந்த பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தென் கொரியா மற்றும் இஸ்ரேலுடன் இராஜதந்திர ரீதியில் ஏற்படுத்தியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு அமைய இலங்கை தொழிலாளர்களுக்கு தென் கொரியா மற்றும் இஸ்ரேலுக்கு ஆட்சேர்ப்பு பணியத்தினால் நேரடியாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை ஜப்பானுடனும் புரிந்துணர்பு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை செய்திருப்பதோடு அது தனியார் துறைகளுக்கு திறக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவுடன் இலங்கை செய்து கொண்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய இலங்கை தொழிலாளர்களுக்கு அந்நாட்டு உற்பத்தி துறை, நிர்மாணத் துறை, கடற்றொழில் துறை மற்றும் கப்பல் தொழில்துறை சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜப்பான் இடையே செய்து கொள்ளப்பட்டிருக்கும் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கையர்கள் ஜப்பானில் வேலைக்காக செல்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

தொழில்நுட்ப சேவைகளில் பயிற்சி பெற்ற ஜப்பான் வேலையாப்புத் திட்டம் (வுஜவீ)

விசேட தேர்ச்சியுடன் ஜப்பான் வேலைவாய்ப்புத் திட்டத்தின் (ஞஞறுசீ) கீழ் தாதியர் பராமரிப்பு சேவை, உணவுச் சேவை, உற்பத்தி மற்றும் விவசாயம் ஆகிய தொழில் துறைகளுக்கு தொழில் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் 31 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் தேர்வு செய்யப்பட்ட பாடசாலை செல்லும் 1,158 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகிறது. கடந்த 03 மாதங்களுக்காகவும் இந்த நன்கொடைகள் இதுவரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பிள்ளைகளில் 863 பேர் தற்போது வெளிநாட்டு வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகள் என்பதோடு எஞ்சிய 295 பேரும் வெளிநாட்டு வேலையை நிறைவு செய்து இந்நாட்டுக்கு வந்திருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர்.

இலங்கை வெளிநாட்டு சேலைவாய்ப்பு பணிகத்தில் 2023 ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை பதிவு செய்து வெளிநாடு சென்றுள்ள 157,995 பேருக்கான காப்புறுதி தவணையாக 359,21 மில்லியன் ரூபா தொகை இலங்கை வெளிநட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருப்பதோடு 646 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு காப்புறுதி இழப்பீடாக 101.88 மில்லியன் ரூபா தொகை வழங்கப்பட்டுள்ளது.








# உழைக்கும் மக்களுக்காகவே அர்ப்பணித்துள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை

நாட்டின் அரச துறை போன்று தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் தமது நாட்டின் அபிருத்திக்காகவும் எதிர்காலத்திற்காகவும் பாராட்டுக்குரிய பங்களிப்பைச் செய்கின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பு, ஆர்வம், செயல்திறன் மற்றும் முறையான சேவையை வழங்குவது ஆகியவை அடிப்படையில் நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறான பணியாளர்கள் அவர்களின் பணிக் காலத்தை நிறைவு செய்து ஒய்வு பெற்ற பின் நாட்டுக்கு மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு சுமையாகாமல் வாழ்வது மிக முக்கியமானதாக உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரச துறை போன்று தனியார் துறை ஊழியர்களினதும் நலனுக்காக அரசின் மூலம் சில நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

எவ்வாறாயினும் அவர்களுக்கு ஏதாவது அல்லது நிவாரண அடிப்படையில் வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்நாட்டில் இருக்கின்ற புகழ்பெற்ற அமைச்சர் ஒருவரான காலஞ்சென்ற லலித் அதுலத்முதலி வர்த்தக அமைச்சராக இருந்தபோது அவரின் சிந்தனைக்கு அமைய கெப்டன் சி. பீ.எஸ். செனவிரத்ன தொழில் அமைச்சராக இந்த பொறுப்பு நிதியச் சபையை நிறுவுவதற்கான சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததோடு 1980இல் 46ஆம் இலக்கம் கொண்ட ஊழியர் பொறுப்பு நிதிய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1981 மார்ச் 01ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் இந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி இந்த நிதியம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நிர்வகிக்கப்படுவதோடு அது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட ஆனால் தற்போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை மேம்பாட்டு அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

அரசின் ஓய்வூதிய திட்டத்திற்கு உரிமை பெறாத அனைத்து அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்கள் அந்த நிதியத்தின் அங்கத்தவர்கள் என்பதோடு அவர்களின் தொழில் வழங்குநர்களால் ஊழியர்களின் மொத்த வருவாய்களில் நூற்றுக்கு 3 மாதந்தம் நிதியத்திற்கு பரிமாற்றப்பட வேண்டி உள்ளது. அதனால் ஊழியர் சேமலாப நிதியம் போன்றல்லாது இதற்கு ஊழியர்/ அங்கத்தவருக்காக பங்களிப்புச் செய்யப்படுவது தொழில் வழங்குநர் மாத்திரம் என்பதோடு அதனால் அது அங்கத்தவர் பங்களிப்புச் செய்யாத நன்மையாகும். அது தவிர பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்கின்ற சுய தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் சுய விருப்பத்துடனான அங்கத்தவர்களை அதிகரிப்பதற்கு விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியம் போன்றல்லாத ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியத்தின் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு முன்னர் பதிவு செய்யும் நடைமுறை ஒன்று இல்லை. வர்த்தகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு முதல் ஊழியரை பணியமர்த்தும் ஒரு தொழில் வழங்குநரின் முதலாவது மற்றும் பிரதானமான பொறுப்பு தொழில் ஆணையாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்து அந்த ஊழியருக்காக பதிவு இலக்கம் ஒன்றை பெற்றுக்கொள்வதாகும். தொழில் திணைக்களத்தின் பதிவு இலக்கம் கிடைத்த பின் நிதியத்திற்கு கொடுபனவுகளை மேற்கொள்வதற்காக குறித்த படிவம் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொழில் வழங்குநரால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் அது தொடர்பில் அறிவிப்பது அல்லது தனிப்பட்ட முறையில் அந்த அலுவலகத்திற்கு செல்லல் வேண்டும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு முதல் பங்களிப்புத் தொகை கிடைத்த பின் அந்த தொழில் வழங்குநர் நிதியத்தின் பங்களிப்புத் தொகையை செலுத்துகின்ற தொழில் வழங்குநரின் பட்டியலுக்கு உள்ளடக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களுக்கு பங்களிப்புத் தொகையை செலுத்துகின்ற ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வேறாக இலக்கம் ஒன்று பெற்றுத் தரப்படும். அவ்வாறான ஊழியர்களினால் அந்த இலக்கம் அனைத்து மாதாந்த கொடுப்பனவு படிவங்களில் அரையாண்டு அறிக்கைகளில் மற்றும் மற்ற ஆவணங்களில் குறிப்பிடுதல் வேண்டும்.



ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கலந்துகொண்டார்.



ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஸ்தாபகர் காலஞ்சென்ற அமைச்சர் லலித் அத்துலத்முதலி




ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் விருது விழா

1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நிறுவப்பட்டதன் பிரதான நோக்கம் பல உள்ளன. நிதி வழங்கல் மற்றும் முதலீட்டில் பங்கேற்பதன் மூலம் ஊழியர் உரிமை, ஊழியர் நலன், பொருளாதார ஜனநாயகத்தை மேம்படுத்தல், தொழில் முயற்சியாளர்களின் சாதாரண பங்கை பெற்று முகாமைத்துவத்தில் ஊழியர் பங்கேற்பை மேம்படுத்தல், ஊழியர் ஓய்வு பெறும்போது பங்களிப்புச் செய்யாத நன்மை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது மற்றும் இந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தேவையான மற்ற அனைத்து செயற்பாடுகள் மற்றும் விடயங்களை மேற்கொள்ளல் இந்த இலக்குகளில் இடம்பெறும்.

ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபை இலங்கையின் மிகப்பெரிய சமூக பாதுகாப்பு நிதியங்களில் ஒன்று என்பதோடு, அங்கத்தவர்களுக்கு மற்றும் சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற அனைத்து ஒத்துழைப்பை தொடர்ந்து பேணி தமது செயற்பாடுகள் மூலம் அதனை நிறைவேற்றியுள்ளது. அண்மையில் ஏற்பட்ட நிலையற்ற அரசியல் சூழல் மற்றும் தீவிர நிலைக்கு உள்ளான அரச நிதி, வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதி ஆகிய துறைகளில் ஏற்பட்ட சமநிலையற்ற நிலை, கடந்த 2022ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதாரம் நூற்றுக்கு 4.8 வீதமாக சுருங்கியது. இந்த தடங்கல் பல வர்த்தகங்களுக்கு பாதகமான முறையில் தாக்கம் செலுத்தியதோடு அதன் காரணமாக பல வர்த்தகங்களும் மூடப்பட்டதன் விளைவாக சபைக்கு கிடைக்கின்ற பங்களிப்புத் தொகை அளவில் குறைந்தது.

இவ்வாறான நிலைமைக்கு மத்தியிலும் கூட ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதிய சபை தமது முகமைத்துவத்தின் கீழ் இருக்கின்ற சொத்துகள் இல்லாவிட்டால் நிதியத்தின் நிகர மதிப்பு 2021 நிதியாண்டில் பதிவான 409 பில்லியன் ரூபாவுக்கு இணையாக 2022ஆம் ஆண்டு முடிவின்போது 460 பில்லியன் ரூபா வரை அதிகரித்து நூற்றுக்கு 12.5 அதிகரிப்பை பெற்றதோடு 2024 மார்ச் 31ஆம் திகதியின்போது நிதியத்தின் நிகர மதிப்பு 508 பில்லியன் ரூபாவை தாண்டி அதிகரிப்பதற்கு முடியுமாகி இருப்பதும் நிதியத்திற்கு மாத்திரமன்றி அதன் அங்கத்தவர்கள் அனைவரும் பெற்ற முக்கிய வெற்றியாக குறிப்பிட முடியும்.

முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபை தமது உறுப்பினர்களுக்கான பாரிய சேவையை வழங்குகின்ற அதேநேரம் அங்கத்தவர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்காகவும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவர்களுக்கான பல்வேறு நிர்வாக ரீதியல் அல்லாத நன்மைகளையும் பெற்றிருப்பதோடு தற்போது ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபையின் உறுப்பினர்கள் தமக்கு நிதி வழங்கும், நிதியை மீள அளிக்கும் உரிமையை பெற்று நிர்வாக ரீதியில் அல்லாத 10 நன்மை திட்டங்களை பெறுகின்றார்கள் என்பதை குறிப்பிட வேண்டும்.

அதன்படி மரண நிதித் திட்டம், நிரந்தர அங்கவீன காப்புறுதித் திட்டம், இதய சத்திரசிகிச்சைக்கான நிதி உதவி, உள்விழி கண்ணாடி வில்லை செலவை மீளளித்தல், மற்றும் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம், ஷ்ரமசுவ ரெகவரணய வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் மருத்துவ திட்டம், வியன வீட்டுக் கடன் திட்டம், சிறுநீரக மாற்று சிகிச்சை நிதி உதவி, உயர் தரம் சித்தி பெற்ற அங்கத்தர்களின் பிள்ளைகளுக்காக உயர் கல்வி புலமைப்பரில் போன்றவை ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபையினால் செயற்படுத்தப்படும் நன்மைத் திட்டங்களாகும்.

இதேவேளை உயர் தரம் சித்தி பெற்ற நிதியத்தின் அங்கத்துவ பிள்ளைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தகுதி பெற்றவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரை 12,000 ரூபா புலமைப்பரிசில் ஒன்று வழங்கப்பட்டதோடு 2023ஆம் ஆண்டில் அந்த முறை மாற்றப்பட்டு அதிகமானவர்களுக்கு நன்மை வழங்கி தேசிய தொழில் பயிற்சி (NVQ) தரத்தின் 02 மற்றும் 04 தரங்களுக்காக தொழில் தகைமையை பெறும் கற்கைகளுக்காக அதிகட்சம் 25,000 ரூபா அடிப்படையில் புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டதோடு 2024 ஆகிய இந்த ஆண்டுக்காக அந்த புலமைப்பரிசில் தொகை அதிகபட்சம் 50,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நன்மை பெறுகின்ற முழு எண்ணிக்கையானவர்கள் 2.6 மில்லியனை (26 இலட்சம்) தாண்டியுள்ளனர். இந்த அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் நிதியம் எப்போதும் உச்ச நன்மையை பெற்றுக் கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு அங்கத்தவர்களுக்கு தமது கணக்கு இருப்புக்கு வருடாந்தம் 3மூ வருடாந்த வட்டித் தொகை ஒன்றை செலுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர நிதியத்தின் பணம் முறையான வகையில் முதலீடு செய்து கிடைத்த இலாபமும் முறையான வகையில் அங்கத்தவர்கள் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டதோடு அதன்படி 2022 ஆம் ஆண்டில் குறித்த 3% வருடாந்த வட்டித் தொகை தவிர 5.75% இலாபத் தொகை ஒன்றும் மேலதிக நன்மையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது மாத்திரம் அல்ல 2023 ஆம் ஆண்டில் குறித்த 3% வருடாந்த வட்டித் தொகை தவிர 6% இலாபத் தொகை ஒன்று அங்கத்தவர்களுக்கு வழங்க முடிந்ததும் இந்த நிதியத்தின் தற்போதைய முன்னேற்றத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 09 பேரைக் கொண்ட பணிப்பாளர் சபையை கொண்டுள்ளது. இந்தப் பணிப்பாளர்கள் இடையே இருவர் தேசிய அளவிலான முதன்மை தொழில் சங்கங்கள் இரண்டை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்கள் என்பது விசேட அம்சமாகும். நிதியத்தின் நன்மைகளை பெறும் அதன் அங்கத்தவர்களுக்காக வழங்கப்படும் சேவையை மிகவும் செயல்திறன் மிக்கதாக மற்றும் முறைப்படுத்தும் நோக்கில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை பல பிராந்தியங்களுக்கு பிரிக்க்கப்பட்டிருப்பதோடு சேகரிப்புகள் மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள் பிரிவு, முதலீட்டுப் பிரிவு, உறுப்பினர் சேவை பிரிவு, நிதிப் பிரிவு, நிர்வாகம் மற்றும் மனித வள பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, கணக்காய்வு மற்றும் சான்றிதழ் பிரிவு, சட்டப் பிரிவு, திட்ட ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு மற்றும் புள்ளிவிபரப் பிரிவு இதில் அடங்கும்.

தமது அங்கத்தவர்களுக்காக இவ்வாறான பங்களிப்பை மேற்கொள்கின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை இலங்கைக்குள் செயற்படுகின்ற முதன்மையான ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு நிதியம் ஒன்றாக கருதப்படுகிறது. மாதாந்த அடிப்படையில் நிதியத்திற்கு வருகின்ற தனியார் துறை மற்றும் அரச சார்பு ஆகிய துறைகளில் பணியாற்றும் ஓய்வூதியத்திற்கு உரிமை கோராத ஊழியர்களிடம் இருந்து நீண்ட காலமாக பெற்றுக் கொள்கின்ற பங்களிப்புத் தொகையை பயன்படுத்தி அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பு ஒன்றை வழங்கும் நோக்கில் நல்லெண்ணத்துடன் செயற்படுவதற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை அர்ப்பணித்துள்ளது. மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெறுவதன் அடிப்படையில் அந்த குறித்த நபர்களுக்கு சொந்தமான குறிப்பிட்ட நன்மைகளை அவர்களுக்கு கிடைப்பதை சபை உறுதி செய்ய வேண்டும் என்பதோடு நிதியத்திற்கு சொந்தமான பல்வேறு வகையான முதலீடுகளை பயன்படுத்தி அவ்வாறு முதலீடு செய்த மூலதனத்தின் பாதுகாப்பையும் உறுதி செய்தல் வேண்டும்.

நாடு மற்றும் அங்கத்தவர்களுக்கு பயன்தரும் சேவை ஒன்றை மேற்கொள்ளும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, கொவிட் பொருந்தொற்றுக்கு பிந்திய காலப்பகுதியில் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமாக நீண்ட காலமாக ஈடுகொடுத்திருக்க முடியுமான தமது பலத்தை நிரூபித்து நிலைத்தன்மையை உறுதி செய்துள்ளது. எந்த ஒரு பாதகமான பொருளாதார நிலைமையிலும் கூட இடைவிடாது முன்னோக்கிச் செல்ல முடியுமான தமது நிறுவனத்தின் திறனை சபை காண்பித்துள்ளது.

பொறுப்பாளர் ஆகிய பாதுகாவலரின் பணியை நிறைவேற்றுவதற்கான சிறந்த முறையில் அமைக்கப்பட்ட வழக்குமுறையான நிறுவன கட்டமைப்பில் தற்போதைய பணிச் சூழலில் ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபை செயற்படுகிறது. தேசத்தின் இரண்டாவது மிகப்பெரிய சமூக பாதுகாப்பு நிதியமாக பேண்தகு நம்பிக்கை மற்றும் நிலைத்தன்மையை மீண்டும் ஒருமுறை அவதானத்திற்கு உட்படுத்தி தமது அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவை ஒன்றை வழங்குவதற்கு முடியுமாகியுள்ளது. மேலும் முன்னோக்கிச் சென்று இந்த நிறுவனம் எதிர்காலத்தில் நாட்டுக்கு மற்றும் ஊழியர்களுக்கு மிகவும் பயன்தரும் நிறுவனமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**நெத்மி புஜனி ரத்னாயக்க**






# அரச சார்பு ஊழியர்களுக்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 'அக்ரஹார' காப்புறுதி

வாழும்போது எமக்கு பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. அதில் நோய்கள், திடீர் விபத்துகள் போன்றவை நாம் அதிகம் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் சவால்களாகும். இவை எதிர்பாராத வகையிலேயே இடம்பெறுகின்றன. அதனால் அன்றாட வாழ்வில் செலவுகளுடன் இதற்காக செலவிடுவது வேலை பார்ப்பவர்களுக்கு சிரமமானது. அதற்கு ஓரளவு உதவுவதற்கு அரச நிறுவனம் ஒன்றாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முன்வந்துள்ளது.

அரச ஊழியர்களுக்காக அக்ரஹார சுகாதார காப்புறுதி திட்டத்தை செயற்படுத்துகின்ற தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொழிலாளர் தினத்தையொட்டி அரச சார்பு ஊழியர்களுக்காகவும் மிக அதிகமான நன்மைகளைக் கொண்ட சுகாதார காப்புறுதி திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறது. அது தொடர்கில் எமது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவர் சட்டத்தரணி சாகல அபயவிக்ரம அவர்களுடன் மேற்கொண்ட நேர்காணல்.

**முதலில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பற்றி கூறுவதென்றால்**

காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2006 இன் 28ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்டது அரச ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டமாகவாகும். இந்த அக்ரஹார காப்புறுதி நிதியம் இதன் ஓர் அங்கம் மாத்திரமாகும். இதன் மற்ற பிரிவாக இலங்கையில் இருக்கும் ஒரே மீள் காப்பீட்டாளராக செயற்படுதலாகும்.

அதேபோன்று மக்கள் கிளர்ச்சி, கலவரம், பங்கரவாத தாக்குதல்கள் போன்றவற்றின் மீள் காப்புறுதி இடம்பெறுவதும் மோட்டார் வாகன காப்புறுதி போன்றவை மேற்கொள்ளப்படுவதும் அக்ரஹார நிதியத்திலாகும். இதனால் இலங்கையில் உள்ள அனைத்து காப்புறுதி நிறுவனங்களினதும் மீள் காப்பீட்டாளராக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செயற்படுகிறது என்பதை குறிப்பிட முடியும்.

இது தவிர ரிய மித்துரா என்ற வாகன காப்புறுதியும் சாதாரண காப்புறுதித் திட்டமாக காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகிறது. 09 இலட்சம் அளவான அரச ஊழியர்கள் இந்த அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்றனர். அது மாத்திரமல்ல அந்த ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் 21 வயதுக்கு குறைவான பிள்ளைகள், திருமணமாகாத ஊழியர்களின் பெற்றோர்கள் இந்த காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதால் அவர்களுக்கு அது அதிக நன்மைகளாக குறிப்பிடலாம். அதேபோன்று சாதாரண காப்புறுதி ஒன்றில் உள்ளடக்கப்படுவது இரு பிள்ளைகள் மாத்திரமாகும். ஆனால் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் 21 வயதுக்குக் குறைவான 4-5 பிள்ளைகள் இருந்தாலும் அவர்கள் அந்த காப்புறுதித் திட்டத்தில் உள்ளடங்குவார்கள்.



தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவி சாகல அபேவிக்ரம

அதேபோன்று இங்கு நாம் இயற்கை மரணத்தில் 07 இலட்சம் தொகை வரையும், திடீர் விபத்தில் ஏற்படும் மரணத்தில் 20 இலட்சம் தொகை வரையும் பெற்றுக்கொடுக்கிறோம். 2016 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற ஓய்வூதியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி நிதியத்தின் காப்புறுதி வழங்கப்படும்.

**இதுவரை அரச ஊழியர்களுக்காக மாத்திரம் செயற்பட்ட அக்ரஹார காப்புறுதி தற்போது அரச சார்பு நிறுவனங்களுக்கும் வழங்குகிறீர்களா?**

ஆம், எமது புதிய காப்புறுதித் திட்டமாக அரச சார்பு நிறுவனங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை குறிப்பிடலாம். உண்மையில் இது முன்னர் வழங்கப்பட்டு பின்னர் சிறிது காலம் நிறுத்தப்பட்டிருந்த காப்புறுதித் திட்டமாகும். நாம் மீண்டும் அரச சார்பு ஊழியர்களுக்கு இந்தக் காப்புறுதித் திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது 1800 ரூபா மாதாந்த தவணைத் தொகைக்காகும். இது பல நன்மைகளைக் கொண்ட மிகப் பெறுமதி மிக்க காப்புறுதித் திட்டம் ஒன்றை நாம் பரிந்துரைத்திருக்கிறோம். தற்போது எம்முடன், துறைமுகம், டெலிகொம் போன்ற நிறுவனங்கள் எமது காப்புறுதித் திட்டத்தை பெற்றிருக்கின்றன. இதனால் 35 வரையான அரச சார்பு ஊழியர்கள் வரையும் எமது காப்புறுதித் திட்டத்தை பெறுகின்றனர்.

ஆரம்பத்தில் இது அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 75 ரூபா தொகையில் ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போது 600 ரூபா வரை அதிகரித்துள்ளது. இதனை மேலும் சிறு தொகையால் அதிகரித்து நாம் புதிதாக அவர்களுக்கு சிறு தொகை தவணையில் காப்புறுதியின் வசதிகளின் அளவை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருக்கிறது. புதிய ஒப்பந்தத்தின் கீழ் புதிதாக அக்ரஹார நாடு முழுவதும் அரச ஊழியர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு கோப் குழுவின் பரிந்துரையின் கீழ் திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அரச ஊழியர்களுக்காக மாதாந்தம் 69 ரூபா பெற்றுக்கொடுக்கப்படுவதோடு அரச சார்பு ஊழியர்களுக்கு எந்த ஒரு பணமும் பெற்றுத்தரப்படுவதில்லை. அந்தத் தொகை அரச சார்பு நிறுவனத்தினால் மற்றும் அந்த ஊழியர்களினால் ஏற்க வேண்டும்.

**அரச சார்பு ஊழியர்களுக்காக வழங்கப்படும் காப்புறுதித் திட்டத்தில் எந்த அளவான வசதிகள் உள்ளன?**


இது நான்கு இலட்சம் ரூபா வருடாந்த நன்மைக்காக வழங்கப்படும் காப்புறுதித் திட்டமாகும். இதற்காக ஊழியர் ஒருவருக்கு மாதாந்தம் செலவாவது 1,800 ரூபா மாத்திரமாகும்.

இதில் தனியார் மருத்துவமனை அறைக் கட்டணத்திற்கு நாளொன்றுக்கு 10,000 வீதம் அதிகபட்சம் 10 நாட்களுக்கு வழங்கப்படும். அதேபோன்று அரச வைத்தியசாலை மற்றும் அரசின் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் அனுமதி பெறும் சந்தர்ப்பத்தில் ஒரு தடைவைக்கு அதிகபட்சம் 7 நாட்கள் மற்றும் வருடாந்தம் 21 நாட்களுக்கு நாளொன்றுக்கு 3000 ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரச வைத்தியசாலை ஒன்றில் இடம்பெறும் குழந்தை பிரசவத்திற்கு அதிகபட்சம் 05 நாட்களுக்கு நாளொன்றுக்கு 3000 ரூபா மற்றும் தனியார் வைத்தியாசாலையில் இடம்பெறும் சாதாரண குழந்தை பிரசவத்திற்கு 50,000 ரூபாவும் சிசேரியன் பிரசவத்திற்கு 125,000 ரூபாவும் வழங்கப்படும். தவிர மூளையில் சத்திரசிகிச்சை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக 1,200,00 ரூபாவும் இதய சத்திரசிகிச்சைக்கு 1,000,000 ரூபாவும், புற்றுநோய்க்கு 600,000 ரூபாவும், இடுப்பு எலும்பு மாற்று சிகிச்சை மற்றும் முழங்கால் மாற்றுச் சிகிச்சைக்கு 250,000 ரூபாவும் செவித்திறன் கருவிக்காக 100,000 ரூபாவும், கண் சிகிச்சைக்கு ஒரு கண்ணுக்கு 50,000 ரூபாவும் வழங்கப்படுகிறது. இந்த காப்புறுதியின் முக்கியத்துவம் என்னவென்றால் காப்புறுதியாளருக்கு மாத்திரமன்றி, குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு அந்த அளவில் இல்லாவிட்டாலும் கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்படுவதாகும்.

இதனால் அரச சார்பு ஊழியர்களுக்கு இது மிகப் பெறுமதியாக வாய்ப்பாக குறிப்பிட முடியும்.

**அயன்தி உடுகம்பல**



# அக்கரைப்பற்றில் இலவச அரிசி விநியோகம்



அக்கரைப்பற்று மத்திய நிருபர்

அக்கரை ப்பற்று பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி விநியோகம் செய்யப்பட்டதுடன், மேற்படி குடும்பங்களுக்கான அரிசியை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா வழங்கி வைத்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் இலவச அரிசி விநியோகத் திட்டத்தின் கீழேயே அக்கரைப்பற்றிலும் இந்நடவடிக்கை அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து அரிசி வழங்கப்பட்டது. இந்நடவடிக்கையின் போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ஆகியோர் பங்குபற்றி தமது சேவைகளை வழங்கினர்.

# கல்முனை அஸ் ஸுஹரா பாடசாலைக்கு உபகரணங்கள்



மாளிகைகைகாடு குறூப் நிருபர்

கல்முனை அஸ் ஸுஹரா வித்தியாலயத்தின் வகுப்பறைகளுக்கு தேவையான உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி வித்தியாலயத்தின் பழைய மாணவ மாணவிகள் அமையத்தினால் இந்த உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதற்கான நிகழ்வில் மேற்படி பாடசாலையின் பழைய மாணவ சங்க செயலாளர் எஸ்.எச்.எம்.அஜ்வாத் மற்றும் ஏ.ஆர்.எம்.றிஸ்லி ஆகியோரினால் பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியாவிடம் உபகரணங்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

# தொட்டவத்தை அல் பஹ்ரியாவில் மாணவர் பாராட்டு விழா





பாணந்துறை, தொட்டவத்தை அல் பஹ்ரியா தேசிய கல்லூரியில் 1992ஆம் ஆண்டு விடுகை மாணவர்களின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கான பாராட்டும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு (25) பாடசாலை வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஏ. ஜேசுரட்னம் கலந்து சிறப்பித்ததோடு முன்னாள் அதிபர் அல்ஹாஜ் என்.எம் அகமத் யாசீன் மற்றும் முன்னாள் ஆசிரியர்களான அல்ஹாஜ் ஏ.எச்.எச்.எம் முர்தஜா, மௌலவி ஏ.சீ.எம் மாஹிர், ஜனாபா எஸ்.ஏ பரீனா பிந்து ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். இதன்போது சுமார் ஐம்பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதை நூல் அறிமுக நிகழ்வு

பேருவளை விசேட நிருபர்

கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் கவிதை நூலின் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (28) தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில், பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் பொருளாளர் கவிஞர் தர்கா நகர் ஸபா தலைமையில் நடைபெற்றது. இதன்போது சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் நூலின் முதல் இரு பிரதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. பிரதிகளை எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஹாபிஸ் இஸ்ஸதீன் வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை ரூமி ஹாஷிம் பவுண்டேசன் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கலாநிதி ரூமி ஹாஷிம் விசேட உரை நிகழ்த்தியதுடன், ஜாமியா நளீமியா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அரபாத் கரீம் சிறப்புரை நிகழ்த்தினார். இலங்கை திறந்த பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளர் திருமதி ஸுமையா ஷரிப்தீன், பஸ்லி ஹமீட் ஆகியோர் நூல் விமர்சனம் செய்தனர்.



# செஞ்சிலுவை சங்கத்தின் இடைக்கால சபை உறுப்பினர்களுக்கு நியமன கடிதம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி கிளைக்கான இடைக்காலச் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி கிளை அலுவலகத்தில் நடைபெற்றது.இதன் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி கிளைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஐந்து உறுப்பினர்களுக்கு இடைக்கால உறுப்பினருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

காத்தான்குடி கிளையின் இடைக் கால தலைவர் எம்.ஐ.எம்.சலீம், செயலாளர் எம்.எச்.எம்.தாஹீர், உறுப்பினர்களான ரிபாய் கலீல், கிராம உத்தியோகத்தர் ரசாக், ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் ரஊப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலாளர் எஸ்.றுத்ராஜா உட்பட இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.


## INVITATION FOR BIDS (IFB)

DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

MUSALI PRADESHIYA SABHA

WORLD BANK / EU FUNDED

LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Laka has received a Loan/Credit from World Bank (WB)/EU towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan/Credit to payments under the LDSP BT4 & PT3 to the below mentioned Contracts.

2. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of Musali Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn) | Required CIDA Grade | Required Bid Security | | Contract period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | | |
| 01 | LDSP/NP/MN/MUPS/2024/BT4/01 | Construction of Mother & Child Care Centre at P.P.Potkeny Alakkaddu | 9.751 | Building C7 or above | 150,000.00 | 16.09.2024 | 119 Days | 19.08.2024 |
| 02 | LDSP/NP/MN/MUPS/2024/PT3/05 | Construction of Pichchavanipankulam Scheme Internal Road7 | 4.754 | Road C8 or above | 75,000.00 | 19.08.2024 | 84 Days | 22.07.2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Building Construction / Road for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.

5. Qualification requirements to qualify for contract award are given in Section 4 (Qualification Information) and Section 5 (Schedule) in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar [Telephone No: 023-2223871 / Fax No: 023-2051672 / Email ID: musalips@gmail.com] and inspect the Bidding Documents at the address Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 08:30 hrs to 15:00 hrs on normal working days.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 1st of May 2024 until 21st of May 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Three thousand five hundred (Rs. 3,500.00). The method of payment will be by Cash.

8. Bids shall be delivered with duplicate to the address at Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar on or before 22nd May 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. All bids shall be accompanied by a Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same in the Sub Clause 16.2 of Section 5 (Schedule Clause 16).

10. The Pre-Bid Meeting will be held on 14th of May 2024 at 10:30 hrs at the Main Office of Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar.

The address (es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)

Musali Pradeshiya Sabha
Chilawathurai, Mannar.
Tel No: 023-2223871
Fax No: 023-2051672
Email ID: musalips@gmail.com



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | நிர்மாணக் காலம் | பொறியியல் மதிப்பீடு மில்லியன் ரூபாவில் | ICTAD பதிவு செய்தல் தரம் | விலை மனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|---|
| RDA/NP/CE(VAV) /SMRRD/ROAD/2024/06 | மேற்பரப்பு சீரமைப்பு, ஸ்ரீ தர்மரத்ன வித்யாரத்ன பிரிவின அஸ்கொன்கிறீட் (ஸ்ரீ தலதா விஹாரய, மடுகந்த அஸ்பால்ட் கொன்கிறீட் பதித்தல் வேலை | 30 நாட்காட்டி நாட்கள் | 5.57 | சி-6 மற்றும் சி-7 மாத்திரம் | 83,550.00 |
| RDA/CE(V)/RMTF/2024/02 | தேர்மோ பிளாஸ்டிக் பொருட்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - நி.பொ. பிரதேசம், மன்னார் | | | | 85,650.00 |
| RDA/PD(NP)/CE(V)/1500KM/2024/01 | Supply, Lay and compact asphalt concrete wearing course using pavers with tack coat using emulsion (CSS-1 at the rate 0.5 ltr/$m^2$ on Maharambukulam – Kalikovil road 1.18 km) | 30 நாட்காட்டி நாட்கள் | 9.48 | சி-6 மற்றும் சி-7 மாத்திரம் | 142,200.00 |
| RDA/PD(NP)/CE(V)/1500KM/2024/02 | Supply, Lay and compact asphalt concrete wearing course using pavers with tack coat using emulsion (CSS-1 at the rate 0.5 ltr/$m^2$ on Parasankulam Lyca Scheme road 0.7 km) | 30 நாட்காட்டி நாட்கள் | 6.63 | சி-6 மற்றும் சி-7 மாத்திரம் | 99,450.00 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 மே 02 ஆம் திகதியிலிருந்து 2024 மே 16 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணையபக்கங்களான **www.mohsl.gov.lk** என்பதனூடாக பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## 2024 ஆம் ஆண்டிற்கான கையிருப்பிலுள்ள சீனியினை விற்பனை செய்வதற்கான மாவட்ட முகவர்களை நியமித்தல்

இலங்கையில் கபிலநிற சீனியினை முதன்மையாக உற்பத்தி செய்யும் எமது நிறுவனம், நீண்ட காலமாக வாடிக்கையாளர்களுக்கு உயர்தர, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான கபிலநிற சீனியினை வழங்குகிறது. இது தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் கலப்பிடம் அற்றவையாகும். வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் சிறு மற்றும் பெரும்போகத்தில் அரைக்கும் பருவங்களில் மாதத்திற்கு 8,000 முதல் 10,000 மெட்ரிக் தொன் சீனியை விற்பனை செய்ய எதிர்பார்க்கிறது. மேலும் இதற்காக, நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடங்களாக கபிலநிற சீனியினை விற்பனை செய்வதற்காக 25 முகவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் கபிலநிற சீனியினை கொள்வனவு செய்ய விரும்பும் ஆர்வமுள்ள முகவர்கள் **2024.05.02** ஆம் திகதி முதல் எமது நிறுவனத்தை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பத்தை எமது தலைமை அலுவலகத்தில் இருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட முகவர்களை மீள்ச் செலுத்தப்படாத ரூ.10,000/- கட்டணத்தை செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளப்படும்.

இதற்காக மாவட்ட முகவர்கள் **2024.05.31** ஆம் திகதி அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்திற்குச் சென்று விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து விசாரணைகளும் : **011-2584184 / 0710912252**
தொலைநகல் : **011-2500674**

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

SELACINE

## இலங்கை ஏ இலகு வெற்றி



ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இலங்கை ஏ அணி டக்வர்த் லூவிஸ் முறையில் 8 விக்கெட் வித்தியாசத்தில் இலகு வெற்றியீட்டி ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் 2–0 என முன்னிலை பெற்றது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று (30) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கான் அணி 27.2 ஓவர்களில் 121 ஓட்டங்களுக்கே சுருண்டது.

மொஹமட் ஷிராஸ், சாமிக்க குணசேரக மற்றும் சஹன் ஆரச்சிகே தலா 2 விக்கெட்டுகளை விழ்த்தினர்.

பதிலெடுத்தாடிய இலங்கை ஏ அணிக்கு சீரற்ற காலநிலை காரணமாக 30 ஓவர்களில் 101 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 15.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் (03) இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### டி20 உலகக் கிண்ணம்:

# அணிகளை அறிவிப்பதற்கான ஐ.சி.சி. கெடு இன்றுடன் முடிவு: இலங்கை தேர்வில் தாமதம்

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான இறுதி அணிகளை சமர்ப்பிப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் விதித்த கேடு இன்றுடன் (மே 1) முடிவடையும் நிலையில் இலங்கையின் 15 பேர் குழாத்தை தேர்வு செய்வதில் இழுபறி நிலை நீடித்து வருகிறது.

டி20 உலகக் கிண்ணம் எதிர்வரும் ஜூன் 1 தொடக்கம் 29 ஆம் திகதி வரை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 15 பேர் குழாத்தை நியூசிலாந்து முதல் நாடாக நேற்று முன்தினம் (29) வெளியிட்டது. எனினும் 15 பேர் கொண்ட ஆரம்ப குழாத்தை வெளியிடுவதற்கு ஐ.சி.சி. மே 1 ஆம் திகதி வரையே கெடு விதித்துள்ளது. இந்தக் குழாத்தில் மாற்றங்கள் செய்வதற்கு மே 22 ஆம் திகதி வரை ஐ.சி.சி. அவகாசம் அளித்துள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கு இலங்கை தேர்வாளர்கள் 25 பேர் கொண்ட ஆரம்ப குழாத்தை ஏற்கனவே அறிவித்துள்ளது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் பயிற்சி முகாம் ஒன்றில் பங்கேற்றுள்ளனர். எனினும் ஐ.சி.சி. விதித்த கெடுவுக்குள் 15 பேர் குழாத்தை தேர்வு செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது. குறிப்பாக இலங்கை வீரர்கள் சிலர் இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். தொடரில் விளையாடி வரும் நிலையில் பயிற்சி முகாமில் பங்கேற்கவில்லை என்பதோடு முக்கோண தொடர் ஒன்றை அடுத்தே இறுதி அணியை




தேர்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பயிற்சி முக்கோணத் தொடர் நாளையே (மே 2) ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அணி வீரர்களை உள்ளடக்கிய இந்த பயிற்சி முக்கோணத் தொடரின் போட்டிகள் மே 02 தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன் அடிப்படையிலேயே இறுதி அணி தேர்வு செய்யப்பட வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் இலங்கை இன்றைக்குள் 15 பேர் குழத்தின் பட்டியலை ஐ.சி.சி. இடம் வழங்கினாலும். பின்னர் அதில் மாற்றங்கள் செய்ய வாய்ப்பு உள்ளது.

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியில் 12 வீரர்கள் கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில் அணித் தேர்வு இறுதிக் கட்டத்தில் இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. இதில் 15 பேர் குழாத்தை பூர்த்தி செய்வதற்கு மேலதிக துடுப்பாட்ட வீரர், சுழற்பந்து வீச்சாளர் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் ஒருவரை தேர்வு செய்வது குறித்து தேர்வாளர்கள் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் மே 25 ஆம் திகதிக்குள் போட்டியில் பங்கேற்கும் அணிகள் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு வருகை தர ஐ.சி.சி. நிபந்தனை விதித்துள்ளது. இதற்கமைய இலங்கை அணி எதிர்வரும் மே 14 ஆம் திகதி அமெரிக்கா செல்ல திட்டமிட்டுள்ளது. இதில் அணி ஒன்று சென்றடையும் காலத்தை பொறுத்தே பயிற்சிப் போட்டிகள் நிர்ணயிக்கப் படவுள்ளன. எனினும் ஐ.பி.எல். தொடர் மே கடைசி வரை நீடிக்கவுள்ள நிலையில் அதில் பங்கேற்றிருக்கும் இலங்கை வீரர்கள் அணியில் இணைவது மற்றும் டி20 உலகக் கிண்ண போட்டிக்கான தயார்படுத்தல்களில் பங்கேற்பதில் சந்தேகம் நிலவி வருகிறது.

டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றில் டி குழுவில் ஆடும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் ஜூன் 3ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி நியூயோர்க்கில் நடைபெறும்.

டி20 உலகக் கிண்ணத்திற்கான இலங்கை அணியின் ஜேர்சி அறிமுகம் எதிர்வரும் மே 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்



# காசா போர் நிறுத்தம் தொடர்பில் பதிலளிக்க ஹமாஸ் ஆலோசனை

## விரைவில் முடிவெடுக்க இரு தரப்புக்கும் அழுத்தம்

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு பகரமாக காசாவில் 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கான இஸ்ரேலின் முன்மொழிவை ஹமாஸ் அமைப்பு ஆராய்ந்து வருகிறது.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற புதிய சுற்று பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் நேற்று (30) கட்டார் திரும்பிய ஹமாஸ் பிரதிநிதிகள் 'முன்மொழிவு மற்றும் திட்டம் பற்றி ஆலோசித்து நடத்துவதாகவும், முடியுமான விரைவில் பதிலளிக்க ஆர்வமாக உள்ளோம் என்றும்' குறிப்பிட்டதாக ஹமாஸ் தரப்பை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹமாஸ் பிரதிநிதிகள் எழுத்து மூல பதில் ஒன்றுடன் கெய்ரோவுக்கு திரும்பவிருப்பதாக எகிப்து உளவுப் பிரிவுடன் தொடர்புபட்ட அல் கஹெரா செய்தித் தளம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் முன்வைத்திருக்கும் இந்த போர் நிறுத்த நிபந்தனைகள் அதிக தளர்வுப்போக்குடையது என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டிருப்பதோடு, போரை நிறுத்துவதற்கு ஹமாஸுக்கு அழுத்தம் கொடுக்கும்படி எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தர்களிடம் வெள்ளை மாளிகை கேட்டுள்ளது.

கடந்த திங்கள் இரவு எகிப்து மற்றும் கட்டார் தலைவர்களுடன் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 'ஹமாஸின் பிடியில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுக்குமாறு' வலியுறுத்தியதோடு, 'முற்றுகை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கான நிவாரணங்களை உறுதி செய்வதற்கு இதுவே ஒரே தடையாக உள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

என்றாலும் போரை நிரந்தமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நிபந்தனைகளை இஸ்ரேல் தொடர்ந்து பொருட்படுத்தவில்லை என்று ஹமாஸ் தரப்பு குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேல் 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு



பரிந்துரைத்திருப்பதாகவும், சுமார் 130 இஸ்ரேலிய பணயக்கைதிகளுக்கு பகரமாக ஆயிரக்கணக்கான பலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கு முன்வந்திருப்பதாகவும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் கெமரூன் குறிப்பிட்டுள்ளார்.

'இரு பிரதான பிரச்சினைகளில் அவர்கள் இன்னும் உறுதியாக இருப்பது இஸ்ரேலிய ஆவணத்தில் தெளிவாகிறது. அவர்கள் முழுமையான போர் நிறுத்தம் ஒன்றை விரும்பவில்லை என்பதோடு காசாவில் இருந்து வாபஸ் பெறுவது தொடர்பில் தீவிரமாக பேசவில்லை. உண்மையில் அவர்கள் (காசாவில்) நிலை கொள்வது பற்றியே பேசுகிறார்கள். அதாவது காசாவில் ஆக்கிரமிப்பு தொடரும் என்பதே இதன் அர்த்தமாகும்' என்று ஹமாஸ் மூத்த அதிகாரி ஒசாமா ஹம்தான், அல் ஜசீரா செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

'மத்தியஸ்தர்களிடம் எமக்கு தீவிரமான கேள்விகள் உள்ளன. அவர்கள் சாதகமான பதில்களை அளித்தால், எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

காசாவில் ஏழு மாதங்களாக மோதல் நீடித்து வரும் நிலையில் எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா போர் நிறுத்தம் ஒன்றுக்கு பல மாதங்களாக முயற்சித்து வருகின்றன. முந்தைய பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்த சூழலிலேயே புதிய சுற்று பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களுக்குள் ஹமாஸுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று எட்டப்படாவிட்டால், திட்டமிடப்பட்ட தெற்கு காசாவின் ரபா நகர் மீதான படை நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று இஸ்ரேலிய இராணுவ வானொலி குறிப்பிட்டுள்ளது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா பகுதி காசாவில் இஸ்ரேலிய தரைப்படை புகாத ஒரே பகுதியாக இருந்து வருகிறது.

### உயிரிழப்பு 34,535 உயர்வு

எனினும் காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடந்து நீடித்து வருகின்றன. நுஸைரத் அகதி முகாமின் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் நேற்று இடம்பெற்ற கடுமையான வான் தாக்குதல்களில் நால்வர் கொல்லப்பட்டு, 15 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேபோன்று காசா நகரின் செய்தூன் பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய மூன்று வான் தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. வடக்கு காசாவின் ஜபலியா நகர் மற்றும் அகதி முகாம்களையும் போர் விமானங்கள் இலக்கு வைத்த நிலையில் மூன்று சிறுவர்கள் உட்பட ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் பொதுமக்களின் வீடுகளை இலக்குவைத்து சரமாரி பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. கான் யூனிஸின் மேற்குப் பகுதியின் அல் அமல் பிரதேசத்தில் இருந்து ஆறு சிதைந்த உடல்களை மீட்பாளர்கள் கண்டுபிடித்த நிலையிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இடிபாடுகளில் இருந்து உடல்களை மீட்கும் தேடுதல் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் காசாவில் 47 பேர் கொல்லப்பட்டு மேலும் 61க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த அரை ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34,535 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 77,704 பேர் காயமடைந்துள்ளனர்.

## இஸ்ரேல் மீதான ஹேக் நீதிமன்ற விசாரணைக்கு அமெரிக்கா எதிர்ப்பு



சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், இஸ்ரேலிய அதிகாரிகள் மீது பிடியாணை பிறப்பிக்கும் அச்சத்திற்கு மத்தியில் இஸ்ரேலின் காசா நடவடிக்கை தொடர்பில் ஹேகில் உள்ள அந்த நீதிமன்றம் விசாரணை நடத்துவதற்கு அமெரிக்கா எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அவதானத்திற்கு கொண்டு வந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

'சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு நாம் ஆதரவு அளிப்பதில்லை என்பதில் தெளிவாக இருப்பதோடு, அதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருப்பதாகவும் நாம் நம்பவில்லை' என்று வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் கரின் ஜீன் பீரே குறிப்பிட்டுள்ளார்.

இதில் நெதன்யாகுவும் குற்றச்சாட்டுக்கு முகம்கொடுக்கக் கூடும் என்று இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஹமாஸ் தலைவர்கள் மீதும் குற்றம்சாட்டி இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பைடனை தொலைபேசியில் அழைத்த நெதன்யாகு இஸ்ரேலிய அதிகாரிகள் மீது பிடியாணை பிறப்பிப்பதை தடுக்குமாறு கோரியதாக எக்சியோஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அங்கத்துவம் பெற்ற நாடுகளல்ல என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பலஸ்தீன நிலப்பகுதியில் போர் குற்றங்களில் ஈடுபட்டது குறித்து அந்த நீதிமன்றம் கடந்த 2021 இல் இஸ்ரேல், ஹமாஸ் மற்றும் ஏனைய பலஸ்தீன போராட்டக் குழுக்களுக்கு எதிரான விசாரணையை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் இராணுவத்தின் உரிமை மீறல்கள் உறுதி



இஸ்ரேல் இராணுவத்தின் ஐந்து பிரிவுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிப்பட்ட சம்பவங்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கண்டறிந்தபோதும் அமெரிக்காவின் இராணுவ ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த அனைத்து சம்பவங்களும் தற்போதைய போருக்கு முன்னர் காசாவுக்கு வெளியில் இடம்பெற்றவையாகும். இவை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தில் இடம்பெற்றவை என்று நம்பப்படுகிறது.

இதில் நான்கு பிரிவுகளில் இஸ்ரேல் திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் ஐந்தாவது பிரிவு தொடர்பில் மேலதிக விபரங்களை வழங்கி இருப்பதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டது இதனால் இந்த அனைத்து இராணுவப் பிரிவுகளும் அமெரிக்க இராணுவ உதவியை பெற தகுதி பெற்றுள்ளன.

இஸ்ரேலுக்கு இராணுவ உதவி அளிக்கும் பிரதான நாடான அமெரிக்கா ஆண்டுதோறும் 3.8 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு முறைமைகளை வழங்குகிறது.

## அமெரிக்காவில் துப்பாக்கி மோதல்: 4 பொலிஸார் பலி



அமெரிக்காவின் வடக்கு கரொலினா மாநிலத்தில் தேடப்படும் குற்றவாளி ஒருவரை கைது செய்யும் முயற்சியின்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டு மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை (29) இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வீட்டை நோக்கி வந்த பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருப்பதோடு இதன் போது ஏற்பட்ட மோதலில் தாக்குதல்தாரி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மூன்று மணி நேரம் நீடித்த இந்த மோதலை அடுத்து மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சூடு நடத்திய வீட்டுக்குள் இருந்த பெண் ஒருவர் மற்றும் 17 வயது ஆடவர் ஒருவர் மீது விசாரணை நடத்தியதாக கூறப்பட்டது.

இதில் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தது தொடர்பில் தேடப்படும் நபரை கைது செய்யும் முயற்சியிலேயே பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## பத்தா–ஹமாஸ் சீனாவில் நல்லிணக்கம் பற்றி பேச்சு



பலஸ்தீன போட்டிக் குழுக்களான ஹமாஸ் மற்றும் பத்தா அமைப்புகள் சீனாவில் சந்தித்து சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

இந்த இரு அமைப்புகளும் அண்மையில் பீஜிங்கில் சந்தித்ததை சீன வெளியுறவு அமைச்சு உறுதி செய்துள்ளது. இந்த இரு அமைப்புகளும் பல ஆண்டுகளாக மோதலில் ஈடுபட்டிருந்தபோதும் காசாவில் இஸ்ரேலின் போர் பலஸ்தீன ஐக்கியம் தொடர்பில் பேசுவதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரு குழுக்களும் சீனாவிற்கு விஜயம் செய்து, ஆழமான மற்றும் நேர்மையான உரையாடலில் பங்கேற்றது என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் குறிப்பிட்டார். எனினும் எப்போது இந்தக் கூட்டம் நடந்தது என்பது பற்றிய விபரத்தை அவர் வெளியிடவில்லை.

'பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனை மூலம் நல்லிணக்கத்தை அடைவதற்கான தங்களது அரசியல் விருப்பத்தை இரு தரப்பும் முழுமையாக வெளிப்படுத்தியதுடன், பல குறிப்பிட்ட விவகாரங்களில் சாதகமான முன்னேற்றம் கண்டன' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 1ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2024-05-01

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | திருகோணமலை நீர் வழங்கல் திட்டம் - சேருநுவர நீர் வழங்கல் திட்டம் மற்றும் ஈச்சிலம்பற்று நீர் வழங்கல் திட்டத்திற்கு Bulk Meter Chambers நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல: TRINCO/O&M/RH/SERU/EACHCH/ 2024/SQ-35 | 2,000/- + VAT ** | ரூபா 18,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C8, C9 தரத்தில் CIDA பதிவு | 1.84 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 026-2222028<br>Fax:026-2225225 | 15/05/2024 மு.ப. 10.00 |
| 02 | ரம்புக்கனை நீர் வழங்கல் திட்டம் - ஹிரிவட்டுன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் தூண் ஆதாரங்களை நிர்மாணித்தல் மற்றும் பம்பி இல்லத்தின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: NWSDB/SAB/P&D/CP/A2-60/ GOSL/2024/02 | 12,500/- + VAT ** | ரூபா 138,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 14 மில்லியன் | பிஔநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 03 | கோணகல நீர் வழங்கல் திட்டம் - வலயம் 03 - கோணகல விநியோக மிகுதி வேலைகளுக்கு DI/uPVC குழாய் பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: NWSDB/SAB/P&D/CP/A2-65/GOSL/2024/1 | 12,500/- + VAT ** | ரூபா 180,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18 மில்லியன் | பிஔநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 04 | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக மேம்படுத்தல்கள் (படிநிலை I)<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(KEG)/CIVIL/REH/ KEGALLE/2024/42 | 4,000/- + VAT | ரூபா 70,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C8 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.58 மில்லியன் | பிஔநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 05 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - வவுனியா பிராந்தியத்திலுள்ள சங்கரவூருக்கு விநியோக குழாய் வழிகளை பூர்த்தியாக்குவதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் பதித்தல்.<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/CEDE/SUP-DEL&DEL-HDPE-SANGARAVOOR/ 2024/034 | 12,500/- + VAT ** | ரூபா 212,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.13 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 06 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - வவுனியா பிராந்தியத்திலுள்ள நெலுங்குளம் மற்றும் புதையல்புட்டிக்கு விநியோக குழாய் வழிகளை பூர்த்தியாக்குவதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் பதித்தல்.<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/RH/LAY-HDPE/DI-NELU& PUTHA/2024 /055 | 12,500/- + VAT ** | ரூபா 212,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.09 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 15/05/2024 பி.ப. 2.00 |
| | வழங்கல் கேள்விகள் | | | | | | |
| 07 | 1500 தொன் நீர்ச் சுண்ணாம்பை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : SUP&MM/CHEM/HL-05/2022/18 | 35,000/-+ VAT ** | ரூபா 2,000,000 /- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 22/05/2024 மு.ப. 10.00 |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 08 | தம்புல்ல நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியிலுள்ள இனாமலுவ High Lift பம்பிக்கு Horizontal Split Casing Centrifugal நீர்ப் பம்பித் தொகுதிகள் (02 எண்ணிக்கை) மற்றும் VSD பெனல்கள் (02 எண்ணிக்கை) மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: NWSDB/C&NC/CP/CEDE(A3-26/A3-16)/M&E/ GOSL/2023/211 | 35,000/- + VAT ** | ரூபா 1,400,500/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 27/05/2024 மு.ப. 10.00 |
| 09 | பொல்கொல்ல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள High Lift பம்பிக்கு மோட்டார் கட்டுப்பாட்டு VFD பெனல்கள், Surge Vessel மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் Horizontal Split Casing Centrifugal நீர்ப் பம்பித் தொகுதிகள் (02 எண்ணிக்கை) வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/S&I/PANEL/ENERGY/ POLGOLLA/2023/189 | 20,000/- + VAT ** | ரூபா 525,000/- | VFD பெனல் மற்றும் மேற்பட்ட மோட்டார் கொள்ளளவுள்ள பம்பிகளை நிறுவுவதில் அனுபவம் வாய்ந்த உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 22/05/2024 மு.ப. 10.00 |
| 10 | தம்புல்ல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள இனாமலுவ பூஸ்டர் பம்பி நிலையத்திற்கு 06 எண்ணிக்கையான Horizontal Split Casing Centrifugal நீர்ப் பம்பித் தொகுதிகள், சகிதம் VFD மோட்டார் கட்டுப்பாட்டு பெனல்கள், மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: NWSDB/C&NC/CP/CEDE(A3-26/A3-16)/M&E/ GOSL/2023/212 | 35,000/- + VAT ** | ரூபா 2,610,000/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 28/05/2024 மு.ப. 10.00 |
| 11 | திஸ்ஸவெவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Alum/Poly Aluminum Chloride Dosing முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல :NWSDB/NC/CEDE/A2-16/M&E/GOSL/ 2024/011 | 12,500/- + VAT ** | ரூபா 195,525/- | Alum/Poly Aluminum Chloride Dosing முறைமை உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஔநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 22/05/2024 பி.ப. 2.00 |
| 12 | தெஹிவளை - கல்கிசை நீர் மீட்புத் திட்டம் - MLP-01 மற்றும் MLP-02 பம்பி இல்லங்களுக்கு Grit Handling (Dry Well) வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல :GCWR/GRITPUMPS/RH/Dehiwala-Mt Lavinia/2024/03 | 6,000/- + VAT ** | ரூபா 150,000/- | சாக்கடை பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele: 011 2623681<br>Fax:011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 22/05/2024 மு.ப. 10.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 13 | மாவட்டப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு (மத்திய - தெற்கு) வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல:RSC-C/M&E/HIRING/O&M/CS/2024/108 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 14 | மத்திய வடக்கு - நீர் பாதுகாப்பு திட்ட அறிவுறுத்தல் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/2024/104 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 15/05/2024 பி.ப. 2.00 |
| 15 | பிரதேச பொறியியலாளருக்கு (பாணந்துறை) வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல:W-S/P&C/H(02)/P-H/O&M/2024/05R-02 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 08 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான Dual A/C மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.59 மில்லியன் | பி.ஔ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 16/05/2024 மு.ப. 10.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**



SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## விலைமனு கோரல்

அத்தனகல்ல பிரதேச சபையின் ரன்பொக்குணுகமயில் அமைந்துள்ள கொம்போஸ்ட் முற்றவெளி இடப்பரப்பில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வாகனங்களை சேர்விஸ் செய்யும் இயந்திர முற்றவெளிக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இயைபாக மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள நிறுவனங்களிடமிருந்து என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விலைக்கோரல் விண்ணப்பங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை 2024-05-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2024-05-21ஆம் திகதி பி.ப. 14.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 1000.00 ரூபா மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை செலுத்தி அத்தனகல்ல பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் அத்தனகல்ல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் எமக்கு அனுப்புதல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**கே.ஏ.யூ. ரஞ்சித்,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**அத்தனகல்ல பிரதேச சபை, நிட்டம்புவ.**

## விலைமனு கோரல்

அத்தனகல்ல பிரதேச சபைக்குத் தேவையான பணியாட் தொகுதியினரின் வருகை மற்றும் வெளியேறலை பதிவு செய்யும் (தொடுகை அற்ற) இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதற்கான விபரக்குறிப்புகளை 033-2287277 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதான அலுவலகத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். அந்த விபரக்குறிப்பிற்கு அமைவான இயந்திரங்களுக்கு மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களது விண்ணப்பப் படிவங்களை 2024-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் அத்தனகல்ல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**கே.ஏ.யூ. ரஞ்சித்,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**அத்தனகல்ல பிரதேச சபை, நிட்டம்புவ.**

## விலைமனு கோரல்

அத்தனகல்ல பிரதேச சபை பிரதான அலுவலக கட்டிடத்தில் சூரிய சக்தி முறைமையொன்றை நிறுவுவதற்காக மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள இதில் தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விலைக்கோரல் விண்ணப்பங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை 2024-05-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2024-05-21ஆம் திகதி பி.ப. 14.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 1000.00 ரூபா மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை செலுத்தி அத்தனகல்ல பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் அத்தனகல்ல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் எமக்கு அனுப்புதல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**கே.ஏ.யூ. ரஞ்சித்,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**அத்தனகல்ல பிரதேச சபை, நிட்டம்புவ.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
